
செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-௨௦௧௫ பங்குனி பரல்-௮

ஏப்பிரல் 1984

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

௧. முனைவர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை.

௨. முனைவர் தமிழண்ணல், பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

௩. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

௪. முனைவர் பொன் சௌரிராசன், தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

௫. முனைவர் பொன் கோதண்டராமன், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

௬. முனைவர் கு. பரமசிவம், எம். ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

௭. பேராசிரியர் கு சுந்தரமூர்த்தி, எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

௮. முனைவர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,டிப்.லிங்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை.

௯. கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

௧௦. முனைவர் வீ. ப. கா. சுந்தரம், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

நிறுவனர்: தாமரைச்செல்வர் வ. சுப்பையா.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.

உள்ளுறை

பக்கம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-ருஅ	தி. வ. ஆண்டு உ०கரு, பங்குனி	பரல்-அ

ஏப்ரல் 1984

அனைத்துலக முதல் சைவசித்தாந்தக் கருத்தரங்கம்

உலக சமயங்கள் அனைத்திலும் சைவசமயம் மிகப் பழைமை யானதாகும்; ''இந்தியாவில் நிலவும் மெய்ப்பொருள் விளக்கங்களுள் தலைசிறந்ததும், திராவிடப் பழங்குடி மக்களின் நுண்ணறிவின் விளைவாகத் தோன்றியதும் ஆகிய சிறந்த படைப்பு சைவசித்தாந்த மாகும்'' என்று சைவசித்தாந்தத்தின் சிறப்பினைப் பாராட்டியுள்ளார் டாக்டர் ஜி. யு. போப்.

சைவ சமயத்தின் குறிக்கோள்களைப் பரப்புவதற்கென எழுந்த சாத்திர தோத்திர நூல்களுள், சாத்திரம் எனச் சிறப்பித்துக் கூறப் படுவன பதினான்கு மெய்கண்ட நூல்களாகும். இச்சித்தாந்த நூல்கள் கூறும் மெய்ப் பொருளின் மாண்பினை நம்மனோர் நன்கு விளக்கமாக உலகிற்கு எடுத்துக் கூறத் தவறிவிட்டனர். அதன் விளைவாகவே, இத்தகையதோர் அரிய மெய்ப்பொருள் விளக்கம் தமிழ்நாட்டில் நிலவுகிறது என்பதைப் பிற நாட்டார்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமற் போயிற்று. தாம் கண்ட அரிய உண்மை களை உலகிற்கு உணர்த்தாமல் வேறு ஏதேதோ கருத்துகளைத் தழுவி, அவற்றையே போற்றி வாழ்தல் தமிழரின் இயல்பாகிவிட்டது போலும்!

ஜி. யு. போப், ஹோய்சிங்டன், மற்றும் தமிழ்நாட்டறிஞர் களான மறைத்திரு மறைமலையடிகள், கா. சு. பிள்ளை, ஜே. எம். நல்ல சாமிப் பிள்ளை போன்ற ஒரு சிலரின் சமயத் தொண்டின் பயனாகவே சைவசித்தாந்தத்தின் பெருமை ஓரளவு நாட்டு மக்களின் நெஞ்சத்தில் இடம் பெறலாயிற்று.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
முதல் பட்டமளிப்பு விழாவும்
இராசராச சோழன்
(ஒரு லட்சம் வெண்பொற்காசுகள்) விருதும்

[பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி]

மகாகவி பாரதியார் நூற்றாண்டை ஒட்டித் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தோற்றுவித்தது பொன்மனச் செம்மல்—புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் அரும்பெருஞ் சாதனை; ஒரு நூற்றாண்டுக்கு மேல் தமிழ் அறிஞர்கள் ஆர்வலர்கள் கண்டு வந்த கனவு, நனவாகிய சிறப்பு அது. மக்களாட்சியில் அரசியல் கட்சிகட்கு இடையே ஏற்படும் போட்டி போராட்டங்களாலும் ஏற்படும் சிற்சில நலங்களுள் ஒன்று அது.

கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்ப் பல்கலைக்கழகம் போட்டுள்ள திட்டங்கள்—நடத்தியுள்ள கருத்தரங்குகள்—தமிழகத்திலும் அப்பாலும் உருவாக்கி வரும் தனித்தனிச் சிறப்பு வாய்ந்த ஆய்வு, மையங்கள்—புதிய தமிழ்க் கலைக்களஞ்சியத்தை உருவாக்கத் தமிழகத் தலைநகரில் (சரியான இடம் இதுவே!) மேற்கொண்டுள்ள முயற்சிகள்—தமிழ்ப் பல்கலைக்கழகத்திலேயே உருவாக்கியுள்ள பல் வேறு ஆய்வுத் துறைகள்—தமிழாய்வுக்குக் குறுகிய நீண்ட கால நிதியுதவித் திட்டங்கள்—இவையெல்லாம் அப் பல்கலைக்கழகத்திற்கு முதல் துணைவேந்தராக நியமனம் பெற்ற பேராசிரியர் டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்களின் நுண்ணறிவின்—திண் ஆற்றலின் நற்பயனே.

மேற்கண்ட சிறப்புகள் மேவிய தமிழ்ப் பல்கலைக்கழகம் மூன்றாண்டுகள் நிறைவடையும் நிலையில் அதன் முதல் பட்டமளிப்பு விழா 1984 மார்ச் 24ஆம் நாள் நடைபெறுவது மெத்த மகிழ்ச்சிக்கு உரியது. இந்த முதல் பட்டமளிப்பு விழாவில் தமிழக முதல்வர்—தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தாய்—டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கட்குச் சிறப்பு டாக்டர் பட்டம் வழங்கப்படுதலும் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் முதலான தமிழ் அறிஞர்கள் கலைஞர்கள் சிறப்பு டாக்டர் பட்டங்கள் பெறுவதும் மகிழ்ந்து போற்றுதற்குரியன. இப் பட்டமளிப்பு விழாவில் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம், எம். ஏ., பி. டி., பி. எல். அவர்

களுக்கும் டாக்டர் பட்டம் வழங்கத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முன் வந்ததும் 'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர் கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று' என்ற சங்கப் புறநானூற்றுப் பண்பின்வழி மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதற்கு நன்றியுடன் இசைய மறுத்ததும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் மாண்புமிகு அமைச்சருக்கும் ஒரே நேரத்தில் பெருமை சேர்ப்பதாகும். +2 கல்வியைத் தமிழ்வழி தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களிலும் பரவுவதற்குத் தலைவர் காமராசரைப் போல ஓசைபடாப் புரட்சி புரிந்த பெருமை புரட்சித் தலைவரின் தலைமையில் பணிபுரியும் அவர்க்குத் தனிப்பெருமை சேர்ப்பதாகும். அப்படியிருந்தும் 'அளவறிதல்' அறத்தையே எண்ணத்திலும், சொல்லிலும் செயலிலும் பெரிதும் போற்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் தம்மைத் தேடிவந்த டாக்டர் பட்டத்தை ஏற்கத் தயங்கியதால், தவிர்த்ததால் அவர் பெருமை மேலும் உயர்ந்துள்ளது என்றே கூற வேண்டும். ஒரு பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகட்கு முன்பு அந்தரங்கக் கணக்கெழுதும் காரணத்திற்காகவும் விளையாட்டு ஈடுபாட்டிற்காகவும் மட்டுமே சிலருக்கு டாக்டர் பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கும் போது நம் மாண்புமிகு கல்வி அமைச்சர்—தமிழகத்தின் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி ஈருக அனைத்திற்கும் பொறுப்பேற்றிருப்பவருக்கு—டாக்டர் பட்டம் வழங்கி ஊக்குவித்தலும் சிறப்பித்தலும் பொருத்தமே. ஆயினும் 'பொறுத்தார் பூமி ஆள்வார்' தானே?

தமிழ்ப் பல்கலைக்கழக முதல் பட்டமளிப்பு விழாவை ஒட்டித் தமிழ்ப் பல்கலைக்கழகம் (படைப்பிலக்கியத்திற்காக?) ஒரு லட்சம் வெண்பொற் காசுகள் மதிப்புடைய ஒரு பரிசை ஏற்படுத்தி அப் பரிசு வரிசையில் முதல் பரிசைத் தவயோகி சுத்தானந்த பாரதியாரின் 'பாரத சக்தி மகா காவிய'த்திற்கு வழங்க முடிவு செய்திருப்பது தமிழுக்கும் தகுதிக்கும் செய்யப்படும் தனிச் சிறப்பாகும். தமிழுக்கான முதல் ஞானபீடப் பரிசே தவயோகி சுத்தானந்த பாரதியாருக்குத்தான் கிடைத்திருக்க வேண்டும்—என் அருமை நண்பர் அகிலன் கோபித்துக்கொள்ள மாட்டார் என்று நம்புகிறேன். நம்மிடையே உயிருடன் வாழ்பவர்களுள் சுத்தானந்த பாரதியாருக்கு அடுத்த நிலையில் 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜ. அவர்கட்கும் அவர்களால் வளர்க்கப்பட்ட அகிலனுக்குமே 'ஞானப்பீட'ப் பரிசு படைப்பிலக்கியங்கட்காகக் கிடைத்திருக்க வேண்டும். பொதுத் தொண்டையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் தலைவர்கள் சிலம்புச் செல்வர் அவர்கட்கும் கலைஞர் கருணாநிதி அவர்கட்குமே முன்னுரிமை முறையில் கிடைக்க வேண்டும். 'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளுதல்' தானே பொதுவான உலகியல்பு? அதற்கு ஒரு பெரு விதி

விலக்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 'முன்னுள்ள வேண்டியவரை' முன்னுள்ளி இராசராச சோழன் பெயரால் தான் நிறுவியுள்ள படைப் பிலக்கிய முதல் பரிசைத் தவயோகி சுத்தானந்த பாரதியாருக்குத் தந்திருப்பது அப் பல்கலைக்கழகத்திற்கே பெருமையும் பேறும் ஆகும்.

தவயோகி சுத்தானந்த பாரதியார் எண்பதாண்டுட்கு மேலான இளைஞர்; நூற்றுக் கணக்கான தமிழ் நூல்களைக் கடந்த அறுப தாண்டுக் காலத்திற்கு மேலாக எழுதிக்!குவித்திருப்பவர். இயற்றமிழ், இசைத்தமிழ் நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழிற்கு மட்டுமே அல்லாமல் நான்காம் தமிழாகிய அறிவியல் தமிழுக்கும் ஐந்தாம் தமிழாகிய மொழிபெயர்ப்புத் தழுவல் தமிழுக்கும் தளராத தொண்டு புரிந்திருப் பவர். அவருடைய நூல்களை ஆய்வு செய்து மட்டுமே பத்துபேர் பத்து பிஎச். டி. பட்டங்களைப் பெறலாம். தனிமனிதராயினும் தனி நிறுவனம் போல் தமிழ்த் தொண்டு புரிந்திருக்கும் பெரியவர் அவர். தமிழில் எத்தனை வகை நூல்கள் வேண்டுமோ அத்தனை வகை நூல்களையும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் முதல் ஆன்மானுபூதி பெற்றவர்கள் வரை அறிந்து மகிழத் தக்க நூல்களைப் படைத்த பெருமை தவயோகி சுத்தானந்த பாரதியாரின் தனியுரிமை. அவர் நம்மிடையே வாழ்ந்துகொண்டிருப்பது நாம் செய்த நற்பேறு.

தவயோகி சுத்தானந்த பாரதியார் தமிழ் மட்டுமன்றி வட மொழி, இந்தி முதலான இந்திய மொழிகள் பலவற்றையும் ஆங்கிலம், பிரஞ்சு முதலான அயலக மொழிகள் பலவற்றையும் நன்கறிந்தவர்; அம் மொழிகளில் கவிதைகள் புனையவும் ஆற்றல் பெற்றவர். திருக்குறள் ஆங்கில ஆக்கமும் பெரிய புராண ஆங்கில உரைநடை ஆக்கமும் (கழக வெளியீடுகள்) ஆங்கிலம் வாயிலாக அவர் தமிழுக்குச் செய்த தனிப்பெருந் தொண்டுகள்.

புலமை நலன்களோடு பொதுத் தொண்டு புரிவதிலும் அயராத அருளாளர் தவயோகி சுத்தானந்த பாரதியார். அரவிந்தர், பாரதி ஆகியோரைப் புதுவையில் இருந்த போது நேரில் அறிந்து பழகிய அவர் உலகெலாம் சுற்றி அதுபற்றிய தம் அனுபவங்களைத் தமிழில் வடித்துத் தந்த துறவித் தமிழரும் அவரே. தமிழ்—தமிழர் வாழ்வுக் காக 'சின்னப் பணிகளை' செய்பவருக்கும் உயர்வு, தாழ்வு, பாராமல் தம் மன, மொழி, மெய்களால் இன்றளவும் உழைத்து வரும் உத்தமர் அவர். தம் பொருளும் உழைப்பும் பல நேரங்களில் எதிர் பார்த்த பயன்களை எய்துவிக்கா நிலையிலும் சோர்வின்றிச் சோம்ப லின்றி உழைக்கும் வீரர் அவர். மேலும் கடந்த அறுபது ஆண்டு கட்கு மேலாகத் தமிழுக்கும் தமிழருக்கும் உழைக்கும் பேரியோர் சிறி யோர் அனைவரையும் ஊக்குவதில் ஒப்புயர்வு இல்லாச் சான்றோர்

அவர். எனவே தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ள இராசராச சோழன் நினைவுப் பரிசை அவர் முதன்மையாகப் பெறுதல் பாரத சக்திக்கும் அவருக்கு அடிநிலை ஆதார சக்தியாக விளங்கும் தமிழ்ச் சக்திக்கும் பெரு மகிழ்வு தருவதே ஆகும்.

இந்நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கருத்து: இராசராச சோழன் நினைவுப் பரிசைப் படைப்பிலக்கியத்திற்கு மட்டுமன்றி அனைத்து வகைத் தமிழிலக்கியப் படைப்பிற்கும் (யாழ் நூல், கருணாமிர்தசாகரம் போன்ற ஆய்வு நூல்கட்கும்) உரிமைப்படுத்தல் இராசராச சோழனின் பேராளுமைக்கும் முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்கும் புதுமையாகவும் விளங்கும் தமிழ்த் தாயின் பேராளுமைக்கும் உள்ளபடியே மதிப்பும் மகிழ்வும் தருவதாகும்.

அறிஞரைப் போற்றுவோம்!

[வேலூர். ம. நாராயணன் எம். ஏ.]

''நான்குவேலி நிலமல்ல ; நூறு வேலி
நன்செயுடன் புன்செயுமே பெற்ற வள்ளல்
மேன்மையுற வாணிபத்தில் வாய்மை காத்தே
மலையளவு பெருநிதியம் ஈட்டும் செல்வன்
ஆண்மையுறக் கேடுகளை வேர றுக்க
அரசியலை நிகழ்த்துகின்ற தலைவன் ஓர்நாள்
தூண்ஒன்று வீழ்வதைப்போல் வீழ்ந்து விட்டான்
துக்கத்தால் புலம்பிடுவோம் அழுவோம் ஆனால்...

வ்ள்ளலவன் பெற்றிருந்த நிலமோ செல்வன்
வாணிபத்தில் ஈட்டிவைத்த நிதியோ ; கொள்கை
வல்லவனின் விழியனைய விதியோ இந்த
மண்ணுலகில் தானிருக்கும், மக்கள் துய்க்க!
அள்ளுதொறும் சுரந்துவரும் 'அறிவுச்' செல்வம்
அன்றாடம் வழங்குகின்ற அறிஞர் மாண்டால்
உள்ளபடி உள்ளதென்ன ? உணர்ந்து பார்ப்போம்
உயிரிருக்கும் போழ்தேநாம் ''போற்றிக் கொள்வோம்!''

முறைப் பெயரும் முறையீடும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

''தமிழில் எத்தனை பரம்பரைகளுக்கு முறைப் பெயர்கள் உண்டு'' என்று ஓரன்பர் வினவினர். அவர் பன்மொழிப் புலமையாளர்; பட்டறிவும் வாய்ந்தவர்; புதியன கண்டு போற்றுதலில் பூரிப்பவர்; அவர் வினவுதல் மகிழ்வு தந்தது. ஆனால், யான் அதற்கு நேர் விடை கூருமல் 'வினஎதிர் வினு' என்னும் முறைப்படி, ''ஆங்கிலத்தில் எத்தனை பரம்பரைகளுக்கு முறைப் பெயர் வழங்குகின்றது'' என்றேன்.

''தந்தை மகன், தாய்மகள் என்று இரு பரம்பரைக்கே உண்டு. அதற்கு முன்பின் உள்ள பரம்பரைக்கு அவற்றின் ஒட்டுப் பெயர்களே உண்டு. தனிப் பெயர் இல்லை'' என்ருர்.

''நன்றி; மகிழ்ச்சி'' என்று கூறிய யான், ''தமிழில் எத்தனை பரம்பரைக்கு முறைப்பெயர் உண்டு என்பது நீங்கள் அறிந்ததுதானே! அவை மிகுதியானவை அல்லவா'' என்றேன்.

''ஆம்! ஐந்து பரம்பரைக்கு உண்டு என்று நினைக்கிறேன்'' என்று கூறிய அவர் அவற்றைச் சுட்டினர். ''இவ்வளவு தானு? இன்னும் உண்டா'' என்ருர் மீண்டும்!

''ஒன்பது பரம்பரைக்குத் தமிழில் முறைப்பெயர் உண்டு'' என்று யான் கூறவும் அவர், தம் கண்களை அகலவிரித்து வியப்புடன் தம் கையைத் தலைமேல் வைத்துக்கொண்டு ''ஓ! கடவுளே அவ்வளவு சொற்கள் உண்டா?'' என்ருர்.

அதன் பின்னே தமிழிலுள்ள முறைப் பெயர்களைப்பற்றி உரையாடினேம். அவருக்கு வியப்பான செய்திகள் பல; எனக்குப் புதியதோர் ஆய்வுத் தலைப்பாட்டு வாய்ப்பு! ''எந்த ஒரு தூண்டலும் துலக்கத்திற்கு உண்டாவனவே'' என்னும் கடைப்பிடியைக் கொண்டால் ஆய்வுத் துறைகள் புதிது புதிதாக வந்துகொண்டே இருத்தல் உறுதியாம்; உண்மையுமாம்!

முறைப்பெயர் ஆய்வு பழமையானது. ஆசிரியர் தொல்காப்பியனுர் முறைப்பெயரை நன்கு ஆய்கிருர். அது விளியேற்கும் முறையை விரித்துரைக்கிருர். முறைப்பெயர்க்கு வரும் எழுத்துகளையும் இயம்புகின்ருர். முறைப்பெயர் என்பதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம் அருமையானது. ''பிறப்பு முறைபற்றிய பெயரே முறைப்பெயர்'' என்பது அவர்கள் தரும் விளக்கமாம்.

பிறப்பு முறையால் தானே தாய் தந்தை, மகன் மகள், பேரன் பேர்த்தி என்பன வெல்லாம் இயல்கின்றன.

முறைப்பெயர்கள் தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் ஏற்ப வேறுபடுதல் தனிச் சிறப்புக்கு உரியதாம். "என் தாயும் உன் தாயும் யார் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் யார் யாரோ?" என்னும் பொருளமையக் குறுந்தொகைப் பாட்டொன்று வருகின்றது. அது,

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?"

என்பது. இதில் யாய், ஞாய், எந்தை நுந்தை எனத் தன்மை முன்னிலை இடங்களுக்கு ஏற்ப முறைப்பெயர் வருதலை அறிகின்றோம். ஆனால், தொல். சொல். உரையாசிரியர் தெய்வச் சிலையார் மூவிடங்களிலும் வரும் முறைப் பெயர்களை விளக்குகிறார் :

"தந்தை, நுந்தை, எந்தை எனவும்,

தாய், ஞாய், யாய் எனவும்,

தம்முன், நும்முன், எம்முன் எனவும்,

தம்பி, நும்பி, எம்பி எனவும் முதல்வனையும் ஈன்றாளையும் முன் பிறந்தானையும் பின் பிறந்தானையும் உணர்த்தும் பன்மைச் சொற்களெல்லாம் பொருண் முகத்தால் தம்மையும் பிறரையும் உணர்த்துவன" என்கிறார்.

முறை என்பது பிறப்பொடு வந்த முறைமையல்லவோ? அதனால் உற்றார் உறவினரை 'முறை' வைத்துக் கூப்பிடுவர். அதனை முறைமையாகப் போற்றுவர். முறையாவது நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, நடைமுறை என்னும் பொருள்களை யெல்லாம் தரும் சொல். 'முறை மாப்பிள்ளை' முறைப் பெண் என்பது இன்றும் உள்ளவையே. முறைகேடாக நடப்பவர் முறைகேடர் எனப்படுவார். முறை தவறிப் பார்த்தலும், முறைதவறிப் பேசுதலும் முறைத்துப் பார்ப்பதாகவும், முறைத்துப் பேசுவதாகவும் இகழப்படும். முறைகேடு நடந்துவிட்டால் 'முறையோ?' என்று 'முறையீடு' செய்வதும் வழக்கம். 'முறை செய்து காப்பவனே இறை' என்பது அறமுறை! இப்படி முறை முறையே சொல்ல இன்னும் எத்தனை எத்தனையோ முறைகள் இருக்கின்றன! இருந்தும் முறையை முகத்திலே அறைந்து தள்ளி, அதன் முதுகின் மேல் 'பாந்தத்துவம்' (பாந்துவம்) ஏறிக்கொண்டு உலாவருகின்றதைக் காண்கிறோம்.

தமிழில் முறைப் பெயர் ஒன்று இரண்டா? நூற்றுக்கு மேலுண்டு! அப்பா அம்மாவுக்கு எத்தனை எத்தனை பெயர்கள்? பாட்டன் பாட்டிக்கு எத்தனை எத்தனை பெயர்கள்?

அண்ணிக்கு ஒரு பெயர் மட்டுமா? ஊரூர்க்கு எத்தனை பெயர்கள்? ஒவ்வோர் இனத்திலும் ஏன்? குடியிலும் எத்தனை பெயர்கள்? இவற்றையெல்லாம் எண்ணினோமா? எண்ணித் தொகுத்தோமா? தொகுத்து எழுதினோமா? எல்லைகாணவில்லை என்றாலும் இயன்றதையாவது முயன்று திரட்டினோமா? இல்லையே?

முறைப்பெயர், வாழ்வுக்கு அப்பாற்பட்டது இல்லையே! வாழ்வோடும் ஒன்றி உடனுகி இருப்பதுதானே! அரும்பாடுபட்டு மண்டையை உடைத்துத் தேடவேண்டியதும் இல்லையே! பக்கம் பக்கமாக நூலைத் திருப்பிப்பார்க்க வேண்டியதும் இல்லையே! அங்கங்கு அப்படி அப்படி வழங்கும் முறைப்பெயர்களைப் பெருங்குணத்தோடும்—மொழித் தொண்டு என்னும் எண்ணத்தோடும்—வரலாற்றுத் தொகுப்பு என்னும் உணர்வோடும் ஈடுபட்டால்—ஒவ்வொருவரும் தாம் தாம் அறிந்த—தமக்குத் தொடர்புடைய முதுவர் வழியாக அறிந்த சொற்களை அவற்றின் விளக்கத்தோடு வரைந்தால் எவ்வளவு பெரும்பணியாகத் திகழும்! எத்தனை அருமையான—இனிமையான—அதே பொழுதில் தனித் தமிழுக்கு ஊற்றமான சொற்கள் கிட்டுமே! அகராதிகளிலும், புனைவு நூல்களிலும் புதிய ஆய்வுகளிலும் இடம் பெறுமே! ஒரு வட்டாரத்தின் அளவில்—ஓர் இனத்தின் அளவில்—ஒரு குடும்பத்தின் அளவில் அமைந்து கிடக்கும் முறைப்பெயர்கள் மக்கள் பொதுச் சொத்தாகப் பயன் படுமே! வருங்கால வழி முறையினர் எங்கள் முந்தையர் தந்த செந்தமிழ்வளம் என்று சிறப்பித்துப் பயன் கொள்ள வாய்ப்பாகுமே!

அன்பர்களே, ஆர்வலர்களே, ஆய்வுத் தலைப்பாடு உடையவர்களே, உங்கள் உங்கள் உள்ளுள் ஆட்சி செய்யும் முறைப்பெயர்களை விளக்கத்துடன் எழுதியனுப்பும் முயற்சியை மேற்கொள்ளல் முறை சிறக்க உதவும் அல்லவோ! உங்கள் உதவி நன்றியுடன் போற்றப் படும்! உரிய வகையில் உங்கள் உதவி பாராட்டப்படும்! ஏற்ற வகையில் எழுத்துருவில் வடிக்கப்பெற்றுத் தமிழ் வளத்தில் தங்கள் பங்கு ஈதென்றும் திகழும்.

எத்தனை எத்தனையோ நூறுயிரம் சொற்களை வழங்கிய தமிழுக்கு, நாமறிந்த சொற்களை அழியாமல் காக்கும் நன்றிக் கடனையாவது செலுத்துதல் முறைமையன்றோ!

தொடர்புக்கு முகவரி:

இரா. இளங்குமரன்,

பாவாணர் ஆராய்ச்சி நூலகம், திருநகர், மதுரை—625006.

— — —

ஆட்சிமொழிச் சிந்தனைகள்

[தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை
மாக்கவி பாரதி நகர், சென்னை-600039.]

REAL ESTATE

ஆட்சிமொழிக் காவலர் கீ இராமலிங்கனார் அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பு அரிய மொழிபெயர்ப்பு ஒன்றை ஆக்கித் தந்தார். அது தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி அனைவரின் கவனத்தையும் கவர்ந்திழுத்துவிட்டது. Tutorial College என்னும் தொடரைத் "தோற்ருேரியல் கல்லூரி" என்று மொழி பெயர்த்தார் இராமலிங்கனார். சொல்லும் பொருளும் இணைந்து நின்று, ஓங்கிய ஒலியும் ஒருங்கமைந்து, சொல்லச் சொல்லச் சுவை மலியும் இந்த மொழிபெயர்ப்பைக் கேட்டு மகிழாதவர் யாருமே இரார். இவ்வாறு தோலா மொழி பெயர்ப்புகள் பல வற்றைச் செய்து தந்துள்ளவர் இராமலிங்கனார் அவர்களே யாவார்கள். இவரைப் போலவே இனிய மொழிபெயர்ப்புகளைச் செய்ய விரைந்த பலர் "தோற்ருேரியல் கல்லூரிக்கு" விண்ணப்பம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். நிற்க.

நான் நன்கு மதிக்கும் அருமை நண்பர் உயர்திரு. சா. கணேசன் அவர்கள் என்னை எதிர்ப்பட்டு "ஒரு மொழிபெயர்ப்பு தேவை" என்று கூறினார். எந்தச் சொல்லை எடுத்துக் கொடுப் பாரோ என்று அச்சங்கொள்வதற்கு முன்னர் "Real Estate" என்று சொல்லிவிட்டு "நாளை காலை ஒன்பது மணிக்குள் நல்லதொரு மொழிபெயர்ப்பை வழங்கிட வேண்டும்" என்று சொல்லி முடித்து விட்டார்! நான் சிந்தனையில் மூழ்கிவிட்டேன்!

Real Estate. ஆம். அதன் மொழிபெயர்ப்பு உண்மையி லேயே கடினமானதுதான் (Really difficult) என்பதைக் கண்டு கொண்டேன்.

முதற்கண் சட்ட வல்லுநர்களோடு கருத்துகளைச் சரிபார்த்துக் கொண்டேன். அதன்பின்னர் தமிழறிஞர் திருமதி ஏ. ஃபிளாரன்ஸ் அவர்களோடு கலந்துரையாடினேன். சிறந்த எழுத்தாளரும் சிறந்த பேச்சாளருமான திருமதி ஃபிளாரன்ஸ் அவர்கள் துல்லியமான கருத்துகளைத் தெள்ளிய முறையில் எடுத்து விளக்குவதில் மிகவும் வல்லவர். மொழிபெயர்ப்புகளைச் செய்யும்போது எதிர்ப்படும் எந்தச் சிக்கலையும் எளிதில் சுக்கலாக்கிச் சுடரும் பொன் வடிவங்

களைச் செதுக்கியமைப்பதில் இவர் மிகவும் சிறந்தவர். ஆட்சிமொழி ஆணையத்தில் அமர்ந்து அரும்பணியாற்றிவரும் இவர் அரிய செய்தி யொன்றைத் தெரிவித்தார். Fair rent என்னும் தொடரை ''நேரிய வாடகை'' என்று நாம் மொழிபெயர்த்துள்ளோமே. அதே முறையில் இந்த ''நேரிய'' என்னும் சொல்லைக் கொண்டு சீரிய மொழிபெயர்ப்பை அமைக்கலாமே என்று கூறினார். ஆம். நேரிய, சீரிய கருத்தை நெறிப்படுத்திக் கொடுத்தார் திருமதி ஃபிளாரன்ஸ்.

Real Estate என்னும் தொடருக்கு ஏராளமான விளக்கங்கள் இருப்பினும், முக்கியமான, மையமான விளக்கத்தை எடுத்துக் கொள்வோம். Land with houses, trees, minerals etc thereon என்பது பொருத்தமான விளக்கமாகும். Consisting of immovable property such as lands or houses என்பதும் இன்னொரு நல்ல விளக்கமாகும். Real என்னும் சொல் அதற்குரிய இயல்பான பொருளோடுதான் முதன்முதலில் ஆளப்பெற்றிருத்தல் வேண்டும். ஆயினும் காலப்போக்கில் அதன்மீது பல்வேறு புதுப்புதுப் பொருள் களும் அடுக்கியடுக்கி ஏற்றப்பட்டுவிட்டன என்பது தெளிவாகும்.

அகராதி விளக்கங்களும் அறிஞர்கள் விளக்கங்களும் இரண்டு முக்கிய கருத்துகளை முன் வைத்துவிட்டன. ஒன்று, Real அதாவது Something real ''உண்மையான ஒரு பொருள்'' என்பதாகும். இரண்டாவது கருத்து ''வீடு, நில உடைமைகள்'' என்பதாகும். இந்த இரண்டாவது கருத்தையே சிறப்பு அகராதிகள் நிரப்பிக் காட்டுகின்றன. அண்மையில் வெளியிடப்பெற்றுள்ள வங்கியியல் அகராதி இதைவிட முன்னேற்றமாக ''நிலைச் சொத்து'' என்று குறித்துள்ளது. பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.

உண்மையான, நிலையான என்னும் இரண்டு கருத்துகளும் இணைந்து நடைபயின்றால், இனிய மொழிபெயர்ப்பு பிறந்துவிடும். ''சீர்'' என்னும் சொல்லுக்கு எத்தனையோ இனிய பொருள்கள் இருப்பதைப் போன்றே ''நேர்'' என்னும் சொல்லுக்கும் பல நல்ல பொருள்கள் படர்ந்து நிற்பதைப் பார்க்கின்றோம். நமக்கு வேண்டிய இரண்டு கருத்துகளுங்கூட அதில் அடங்கித்தான் இருக்கின்றன. உண்மை, நிலைத்த தன்மை என்னும் இரண்டு கருத்துகளும் இந்தச் சொல்லினுள்ளே பொதிந்து நிற்கின்றன. ஆம். நெடுவுரை தவிர்த்து முடிவுரை கூறும் கட்டத்திற்கு வந்துவிட்டோம்.

வரிசைப்படி வகைப்பாடு செய்தால், நிலவகைச் சொத்து, நிலைச் சொத்து, நிலையியல் சொத்து என்று அமைத்துக்கொண்டே போகலாம். ''நிலைச் சொத்து'' என்பது immovable property என்பதை விளக்குவதாக உள்ளது. Estate என்னும் சொல்லிற்குப்

பல்வேறு பொருள்களும் விளக்கங்களும் இருக்கின்றன. அவை ஈண்டுத் தேவைப்படவில்லை. ''சொத்து'', ''பொருட் செல்வம்'' என்னும் மொழிபெயர்ப்புகளை ஏற்ற இடங்களில் இனிதாக அமைத்துக் கொள்ளலாம். இந்தக் கட்டுரையைப் பொறுத்தவரையில் ''சொத்து'' என்னும் சொல்லே நமக்குப் பெருஞ் சொத்தாக அமைந்துவிடுகின்றது.

Real estate என்பதை ''ரியல் சொத்து'' என்று சொல்லலாம் என்று கூறிவிடுவதாக வைத்துக்கொள்வோம்! ''இதுவா மொழிபெயர்ப்பு'' என்று எல்லாரும் எதிர்ப்பு தெரிவிப்பர்! ''நே'' (Nay) அல்லது No என்று சொல்லுவர். ஆயினும் No—real என்பது சரியான கருத்தன்று! நேர்—இயல் என்பதே சரியான கருத்தாகும்.

நண்பரிடம் எடுத்துக் கூறினேன். அவர் பெருமகிழ்ச்சியடைந்தார். ''நேரியல் சொத்து'' என்பதே எழில் மொழி பெயர்ப்பாகும் என்று மகிழ்ந்து கூறினார். விளக்கத்தையும் அவரே கொடுத்தார். ''Real என்னும் சொல்லுக்கு உரிய இரண்டு பொருள்களும் இங்கே கிடைக்கின்றன. அத்துடன் இரண்டு சொற்களும் இசைந்து ஒலிக்கின்றன'' என்றும் தெரிவித்தார். நண்பர் சா. கணேசன் அவர்கள் இராமலிங்கனாரின் பக்கத்து ஊர்க்காரர் என்பதைப் பகரவும் வேண்டுமோ ?

மறுபடியும் ஒரு '' No '' (மறுப்பு) தலைகாட்டுகின்றது. ''நேரியல்'' என்னும் சொல்லிற்கு ''மேலாடை'' என்னும் பொருள் உண்டாயிற்றே என்று உரைக்கக்கூடும். ஆகவே

Real Estate = நேரியல் சொத்து அல்லது நேர் சொத்து.

———

நிலைப்பதில்லை !

[கடலூர். மணிமாறன், க. மு., கல். மு]

மணக்காத மலர்களினால், நோயைப் போக்கா
மருந்துகளால், மதியாத சுற்றத் தாரால்,
இணக்கமிலா இல்வாழ்வால், அறத்தைக் கூறு
இலக்கியத்தால், எள்ளளவும் பயனே இல்லை!
பிணக்குகளைத் தாம்வலிந்து தேடிச் செல்லும்
பேதையினர் வெல்வதில்லை ; இன்சொல் லோடு
குணமிழந்து செயல்மறந்து கொள்கை மாறிக்
குழப்பிடுவோர் வரலாற்றில் நிலைப்ப தில்லை !

பால் நினைந்தூட்டிய தாய்

[க. பி. கமலையா]

சுவை ஒன்பது வகைப்படும். அவையாவன : வீரச் சுவை, அச்சச்சுவை, இழிப்புச் சுவை, வியப்புச் சுவை, இன்பச் சுவை, அவலச் சுவை, நகைச் சுவை, நடுவுநிலைச் சுவை, வெகுளிச் சுவை, இவை ஆடலில் அபிநயிக்கவும், நாடகத்தில் நடிக்கவும் படுகின்றன. இயல்பாகவும் மனித வாழ்க்கையில் நிகழ்கின்றன. அல்லல்பட்டு ஆற்ருது அழுவது அவலமாகும். துயரம் எவ்வாறு அபிநயத்தில் காட்டப்படுகிறது என்பதை ஒரு பாடல் விளக்கும்.

''அவலத் தபிநயம் அறிவரக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி இடும்பையும் பிதற்றிய சொல்லும்
நிறைகை யழிதலும் நீர்மையில் கிளவியும்
பொறையின் ருகலும் புணர்த்தினர் புலவர்.''

கவலை சோர்ந்து கண்ணீர் வடியும் வாடிய முகத்துடன் தள்ளாடித் துன்பத்தில் உழன்று, பிதற்றிக்கொண்டு முன்னுக்குப் பின் முரணுகப் பேசுவர் இன்னலுக்குள்ளானோர். நீதி கேட்டுத் தன் முன் நின்ற கண்ணகியைப் பார்த்துப் பாண்டியன் வாயிலிருந்து வந்த தொடக்கச் சொற்களே ''நீர்வார் கண்ணை எம் முன் வந்தோய்! யாரையோ நீ மடக்கொடி ?'' என்பனவே. இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் மனிதரைப் பற்றி நிற்கின்றன. இயற்கை அனுபவம் செயற்கையில் நடிக்கப்படும்பொழுது அதை நாடகமாய்க் காண்கின்ருன் மனிதன். எல்லாம் இன்பமயமாயிருக்க வேண்டுமென்று இன்பக் காட்சிகளைக் காண்பவர் சோக நாடகத்தைக் காணவும் தவறுகின்றதில்லை. எடுத்துக்காட்டாக, அரிச்சந்திர நாடகத்தைச் சொல்லலாம். பனியால் நனைந்து, வெயிலாலுலர்ந்து, பசியாலலைந்து அநியாய வெங்கண் அரவால் உயிரை இழக்கின்ருன் மகன். அவனை ஏந்திச் சுடுகாட்டுக்குச் செல்லும் சந்திரமதியின் அழுகைக் குரலைக் கேட்டும் அவள் படும் பாட்டைப் பார்த்தும் உருகாதாரில்லை எனலாம்.

இழவு வீடுகளில் உறவினர் தம் துயரத்தை வாய்விட்டுச் சொல்லி அழுவதை 'ஒப்பாரி' என்று சொல்லுகிறோம். குறிப்பிட்ட வகையில் ஒருவகைப் பாணியில் ஒப்பாரி அமைகிறது. ஒப்பாரி பெண்களுக்கே உரியது. தாய், தந்தை, கணவன், அண்ணன், தம்பி மற்றும் நெருங்கிய உறவினரின் பிரிவைத் தாங்காது பெண்கள் கூடி அழுகின்றனர். அரிச்சந்திர நாடகத்தில் தாய் மகனை இழந்த துயரம் தாங்காது அழுகின்ருள். தாயின் பிரிவுதாங்காமல் அழுகின்ற—ஒப்பாரி வைக்கின்ற ஒரு பெண்ணின் குரலைக் கேட்கலாம்.

தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லையன்ருே! பால் நினேந் தூட்டிய தாயை நினைத்துப் பார்க்காத பிள்ளை ஆணுே பெண்ணுே— இருக்க முடியாது. இனிய உணவை ஊட்டி வளர்த்தாள் தாய். ‘தாயோடு அறுசுவை போம்’ என்று தெரியாமலா சொன்ஞர்! அத் தாயின் மறைவைத் தாங்காத மகள் உரக்க அழுகின்ருள்.

‘‘கல்லறுத்து வீடுகட்டிக் கடுகுவராச் சன்னலிட்டு
கடுகுவராச் சன்னலிலே, என்னேப் பெத்தஅம்மா!
உன்னே அழைக்கவந்த காலன்வந்து பூந்தானே!
இரும்பறுத்து வீடுகட்டி, எள்ளுவராச் சன்னலிட்டு
எள்ளுவராச் சன்னலிலே, என்னேப் பெத்தஅம்மா!
உன்னே அழைக்கவந்த ஏமன்வந்து பூந்தானே!’’

தகப்பன் எவ்வளவு பெரிய மாளிகை கட்டினுலும் பெண்ணுக்கு அது தாய் வீடுதான். உலக வழக்கும் அதுவே. கல்லுடைத்துக் கட்டப்பட்ட வலுவான கட்டிடமே தன் தாய் வீடு. நெருக்கமாகக் கம்பிகளுள்ள சன்னல்கள் அங்குண்டு. எவரும் எளிதில் புகுந்து விட முடியாதபடி பாதுகாப்புடன் கட்டப்பட்ட வீடு; சற்று மிகைப் படுத்திக் ‘கடுகுவராச் சன்னல்’ என்றும், ‘எள்ளுவராச் சன்னல்’ என்றும் பெண் சொல்கின்ருள். கூற்றுவன் கரிய எருமைக் கடா வின்மீது வருவானென்று சொல்வார்களே! எவ்வாறு உள்ளே புகுந்து (‘பூந்து’ என்று கொச்சை மொழியில்) தாயை அழைத்துச் சென்ருன். தாய் வீடு கல்லால் கட்டப்பட்டு வெகு காலம் நிற்கக் கூடிய வலுவான கட்டிடம் என்ற பெருமிதமும் பாதுகாப்புள்ள வீடு என்ற வியப்பும் ஓங்கி நிற்கின்றன. உயிர்களேப் பற்றிச்செல்லும் காலனேக் கொடியவன் என்று சொல்வார்கள் பாசக் கயிற்றை வீசியெறிந்து இரக்கமின்றி இழுத்துச் செல்வான் என்றும் சொல்வ துண்டு. ஆனுல் தன் தாயை விண்ணுலகுக்கு மரியாதையுடன் அவன் அழைத்துச் செல்கின்ருன் என்று பெண் பாடுகிருள். ‘அழைக்க வந்த காலன்’ என்ற சொல்லாட்சி அருமையாய் அமை கிறது பாடலில்.

‘‘பாலூத்திப் பாத்திகட்டிப், பாக்குமரம் உண்டுபண்ணி,
நீ பாலும் உறைஞ்சவுடன், நீ பெத்த மக்கள்,
பாக்குமரம் வாடிவிட்டோம்,
நெய்யூத்திப் பாத்திகட்டி, நெல்லிமரம் உண்டுபண்ணி,
நீ நெய்யும் உறைஞ்சவுடன், நீ பெத்த மக்கள்,
நெல்லிமரம் வாடிவிட்டோம்.’’

தாய் தன்னே அன்புடன் ஊட்டி வளர்த்ததை எண்ணி மகள் அழுகின்ருள். மேற்கண்ட பாடலில் தன்னேப் பாக்கு மரம் என்றும் நெல்லி மரம் என்றும் கற்பனே செய்துகொண்டு அவற்றிற்குப்

பாலும் நெய்யும் ஊற்றி வளர்த்தாள் தாய் என்று மகள் பாடுகிருள். அப்படி ஊற்றப்பட்ட நெய்யும் பாலும் எங்கோ வழிந்து வேறிடங்களுக்குச் சென்று வீணுகிவிடக் கூடாதேயென்று கருதியவளான தாய் செவ்வனே பாத்திகட்டிக் கமுகும் நெல்லியும் நன்கு தழைக்கச் செய்தாள். நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடியதனுல் புல்லும் ஓரத்தில் வளர்கின்றது. புல் போன்ற களையும் முளைக்காதபடி கமுகிற்கும் நெல்லிக்கும் மட்டும் பயன் கொடுப்பதற்காகவே தாய் பாத்தி கட்டினுள். பாலும் நெய்யும் உறைந்தவுடன் பாக்கு மரமும் நெல்லி மரமும் வாடி நிற்கின்றன. தாயைப் பாலாகவும் நெய்யாகவும் தன்னைக் கமுகாகவும் நெல்லியாகவும் பெண் உவமித்து அழுகிருள். நீரின் றமையாது உலகு. நீரில்லையேல் கமுகும் நெல்லியும் எவ்வாறு வளரும்? பாலாகிய தன்னை, நெய்யாகிய தன்னை ஊற்றி உயிரைக் கொடுத்துத் தாய் வளர்த்தாள் என்று சொல்லித் தாயன்பை நினைத்து மகள் உருகுகின்ருள். தாய் போய் விட்டாலும் உறைந்த பாலாய், நெய்யாய்த் தன் நினைவில் நிலைத்து நிற்கின்ருள் என்று அவற்றின் சுவையில் தன்னை மறந்து கவி புனைகின்ருள் சேய்.

முன்னர் கண்ட ஒப்பாரிப் பாடல்கள் திருநெல்வேலி மாவட்டத்துச் சங்கரநயினுர் கோயில் பகுதியிலுள்ள சிற்றூர் ஒன்றிலிருந்து சேகரிக்கப்பட்டன. கற்பனை வளமும் கவிநயமும் சிறந்து விளங்கும் இப் பாடல்கள் செவிக்கு விருந்தாயமைகின்றன.

———

அழித்திடுவோம் தமிழ்ப் பகையை!

[நாகை. வேலன்]

பாரதத்தின் சாரதிகள் பறந்துபறந்து சென்ருலும்
பாவிகளாம் சிங்களவர் படுகொலைக்கு அஞ்சவில்லை
பேச்சுகளும் வார்த்தைகளும், பெரும்பூனை கண்டகிளி
கீச்சுக்கீச் சென்பதுபோல் கீச்சொலியாய்ப் போயினவே!
வட்டமேசை மாநாடும் வன்கொலைக்குத் திட்டமிட்ட
மட்டமேசை மாநாடாய் மதிப்பிழந்து போயிற்றே!
பாராண்ட தமிழினமும் பாரதத்தின் உறுப்பென்போம்
பாரதமோ படையனுப்பிப் பைந்தமிழர் தமைக்காக்க
வீரமொடு விரைகின்ற வேளையின்னும் வரவில்லை?
யாராண்டால் நமக்கென்ன என்றுநாம் எண்ணும்வரை
சீராண்ட தமிழினத்தின் சீரழிவே முன்னிற்கும்
சோறுண்டால் போதுமெனச் சொல்லுபவர் உள்ளவரை
யார்யாரோ வாழ்ந்திடுவர் அரியதமிழ் இனமழியும்
ஆயினும்நாம் அழியுமுன்னே அழித்திடுவோம் தமிழ்ப்பகையை!

சங்க நூல்களில் யா மரம்

[பி. எல். சாமி, இ. ஆ. ப.] (ஓய்வு)

''நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள வியம்புங்
கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கற்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலைய வதர்படு மருங்கின்'' —அகம்-17

''மன்னுயிர் மடிந்த மழைமா றமையத்
திலையில வோங்கிய நிலையுயர் யாஅத்து
மேற்கவட் டிருந்த பார்ப்பினங் கட்கு'' —அகம்-31

''கவைமுறி யிழந்த செந்நிலை யாஅத்
தொன்ருங் குயர்சினை யிருந்த வன்பறை
வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்'' —அகம்-33

''ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தா ளியாத்துப்
போழ்வளி முழங்கும் புல்லெ னுயர்சினை'' —அகம்-51

''மால்கழை பிசைந்த கால்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்திமி னளி சுடர்
வான்ருேய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஅவுயர் நனந்தலை
யுயவல் யானை வெரிநுச்சென் றன்ன'' —அகம்-65

''மனையுறை கோழி யணற்ரும் பன்ன
கவையொண் டளிர கருங்கால் யாஅத்து
வேனில் வெற்பிற் கானலங் காய'' —அகம்-187

''அணிந்த போலுஞ் செஞ்செவி எருவை
குறும்பொறை யெழுந்த நெடுந்தாள் யாஅத்
தருங்கவட் டுயர்சினைப் பிள்ளையூட்ட —அகம்-193

''மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கி னீர்வரப் பொழித்துக்
களிறு சுவைத் திட்ட கோதுடைத் ததரல்'' —அகம்-257

''நீடுநிலை யாஅத்துக் கோடுகொ ளருஞ்சுரம்''
—அகம்-263

'ஒல்குநிலை யாஅத் தோங்குசினை பயந்த
வல்குறு வரிநிழ லசையின நோக்க'' —அகம்-287

''யாஅ வொண்டளி ரரக்குவிதிர்த் தன்னநின்
றுக மேனி யம்பசப் பூர''   —அகம்-333

''சாரல் யாஅத் துயர்சினை குழைத்த
மாரி யீர்ந்தளி ரன்ன மேனிப்''   —அகம்-337

''கண்பொரி கவலைய கானத் தாங்க
ணனந்தலை யாஅத் தந்தளிர்ப் பெருஞ்சினை
யில்போ லீழற் செல்வெயி லொழிமார்''   —அகம்-343

''உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய
யாஅ வரிநிழற் றுஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே''
—குறுந்தொகை-232

''பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்குநடைச்
சிறுகட் பெ ‧ நிரை யுறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை கண்டனர் தோழி''
—குறுந்தொகை-255

''பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்''   —குறுந்தொகை-37

''யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்பு''
—குறுந்தொகை-198

''மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
உயங்குடை மடப்பிடி வருத்த நோனது
நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணுந்''
—குறுந்தொகை-307

''புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞிமிறு கடியுங் களிறே தோழி''   —அகம்-59

''நெடுநிலை யாஅம் ஏறும் தொழில''   —நற்றிணை-186

''தேம்பட மலர்ந்த மராஅ மெல்லிணரு
மும்பல கைத்த வொண்முறி யாவுந்
தளிரொடு மிடைந்த காமர் கண்ணி
திரங்குமர னாரிற் பொலியச் சூடி''   —மலைபடுகடாம்-428
(பி. பேதம்) 'ஆச்சாவிற் பூவும்—யாம் பூவும்,

"சேயின் வருஉம் மதவலி யாவுயர்ந்
தோமை நீடிய கானிடை அத்தம்" —நற்றிணை-198

"நெருப்பவிர் கனலி யுருப்புச் சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழ லிரீஇச்
சிறுவரை யிறப்பிற் காண்குவை செறிதொடிப்"
—ஐங்குறுநூறு-388

"வருந்தினை வாழியெ னெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை" —அகம்-19

சங்க நூல்களில் 'யா' என்றொரு மரம் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான சங்கப் பாடல்களில் இம் மரத்தின் பெயர் 'யாஅ' எனறழைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் 'யா' என்று இம் மரம் அழைக்கப்பட்டுள்ளது;

"யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே"
—தொல்காப்பியம் ; எழுத்ததிகாரம் : 229

என்று வரும் சூத்திரத்தில் 'யாமரம்' என்று அழைக்கப்பட்டுள்ளது. யாமரம் இலையுதிர் காடுகளில் பாலையாக மாறும் காடுகளில் கூறப்பட்டுள்ளது. நெடுநிலை யா, நிலையுயர் யா, யாவுயா நனந்தலை, நெடுந்தாள் யா, ஓங்குதலை யா என்று கூறப்பட்டிருப்பதால் 'யாமரம்' மிக உயர்ந்து வளரும் மரம் என்று தெரிகின்றது. கருங்கால் மரம் என்று சொல்லப்பட்டிருப்பதால் அடிமரம் கருப்பாயிருக்கும் என்பது தெரிகின்றது. முதிர்ந்த மரத்தின் அடிப்பாகம் கருப்பாயிருக்கு மென்று வனத்துறையினர் கூறுவர். யாமரம் அறிவியற்படி எது வென்று அறிய இதன் தளிர் பற்றிய செய்திகள் உதவுகின்றன. 'கோழி யனறருழ்பு அன்ன கவை யொண்டளிர' என்று கூறியிருப்பதைக் காணலாம். கோழியின் தாடையில் இருபக்கமும் தொங்கும் சதைப் பாகம்போல் இரண்டாகப் பிரிந்து காணப்படும் இலை என்று கூறினர். தளிர் முன் பக்கத்தில் இரண்டாகப் பிரிந்து காணப்பட்டதையே 'கவையொண்முறி' என்ற சொற்றொடர் குறிப்பிடுகின்றது. இதன் இலை கவை முறியாத்து என்றும் கவை முறியென்றும் அகநானூறு 257ஆம் பாடலிலும் 33ஆம் பாடலிலும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறுள்ள இலையுடைய மரங்கள் காடுகளில் மந்தாரை இனத்தைச் சேர்ந்தவையே காணப்படும். இவைகளை 'Bauhinia' எனறழைப்பர். இந்த மரங்களுக்குக் கவை இலை (Bilobed leaf) உண்டு. ஆனால் இவ்வினத்தின் இலை பெரிதானவை. காடுகளில இவ்விலைகள் போன்ற சிறியதான இலைகளைக் கொண்ட ஒரே மரம் யா மரமேயாகும். இது Hardwickia Binata என்று அழைக்கப்படும். இதை இம்மரம் என்று உறுதி

யாகக் கூறக் குறுந்தொகையில் வரும் ஒரு பாடற் செய்தி துணை செய்கின்றது.

"பொத்தில் காழ அத்த யாஅத்து, பொரியரை முழுமுதல் உருவக் குத்தி, மறங்கெழு தடக்கையின் வாங்கி உயங்குநடை, சிறுகட் பெருநிரை உறுபசி தீர்க்கும், தடமருப் பியானை" என்று குறுந்தொகை (255) கூறுவது கவனிக்கத்தக்கது. யாமரத்தைக் குத்தித் தடக்கையால் எதையோ வாங்கி யானை நிரைக்கு ஆண் யானை தருவதாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வாங்கி யானை தருவது என்ன என்று ஆராய்ந்தால் ஓர் உண்மை வெளியாகின்றது. இதன் அடிமரத்தினுள் ஒரு வகை எண்ணெய் உண்டு என்று கூறப்பட்டுள்ளது.

(Trees of Hardwickia Binate speceies above 5 feet in girth are tapped for an oil. A hole is bored into this tree with an auger about 3 feet above the surface of the soil and must reach the pith, A tree will give from Four to Sixteen gallons of Oil'—N. L. Bor in 'The Manual Indian Forest Botany')

யாமரத்தைக் குத்தி அதன் வைரத்தை அணுகினால் 4 காலனி லிருந்து 16 காலன் வரை ஒரு வகை எண்ணெயைத் தரும் என்று N. L. Bor எனும் வனத்துறை அறிஞர் கூறியிருப்பதை இது சார்பாக எண்ணிப் பார்க்க வேண்டும். யானை நீருக்காகவும் உணவுக்காகவும் இந்த எண்ணெயை மரத்தைக் குத்தி வாங்கித் தன் நிரைக்குக் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது அரிய செய்தி யாகும். இச் செய்தியிலிருந்து இம் மரம் தற்காலத்தில் ஆச்சா என்றழைக்கப்படும் 'யா' மரம் என்பதில் ஐயமில்லை. ஆச்சா மரத்தில் தளிர் இலை மென்மையானதும் அரக்குத் தெளித்தாற் போல் புள்ளிகள் உள்ளதாகவும் கூறப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். இந்தத் தன்மைகளையெல்லாம் கொண்ட மரம் ஆச்சா என்று இக்காலத்தில் அழைக்கப்படும் யாமரம் என்பதில் ஐயமில்லை.

———

எழுபகையை வெல்ல எழு!

(வெண்பா)

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி
எல்லா மொழியினுக்கும் ஈடற்ற—நல்ல
மொழியாங் கனித்தமிழை முற்றும் அழிக்க
எழுபகையை வெல்ல எழு!

—கவிஞர் 'இடிமுரசு' சென்னை.

அப்பர் பாடிய ஆறை வடதளி

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

பழையாறை சோழர்களால் போற்றிச் சிறப்பிக்கப்பட்ட ஒரு திருநகரம். தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் பலரின் செல்லப் பிள்ளையாய் இருந்து களித்துக் கடைசியில் பாண்டியர்களின் படை யெடுப்பால் பொலிவிழந்து போன இந்நகரில், பார்வை படும் இட மெல்லாம் திருக்கோயில்கள்தாம். சிறியதும் பெரியதுமாய் விளங் கும் பழையாறைக் கோயில்களுள் ஒன்றுதான் ஆறை வடதளி.

அப்பரால் பாடப்பெற்ற இந்த ஆறை வடதளி கும்பகோணத் திற்கு அருகில் உள்ள முழையூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இக் கோயில் இப்போது வள்ளலார் கோயில் என்று வழங்கப்படுகிறது. அப்பர் தம் திருத்தலக் கோவையில் வைப்புத்தலமாகக் குறிக்கும் முழையூர் பரசுநாதர் கோயிலுக்கு வெகு அண்மையில் இந்த ஆறை வடதளி அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. இந்த ஆறை வடதளியை அப்பர் கண்டதும், பின் நடந்த நிகழ்ச்சிகளும் சேக்கிழா ரால் திருநாவுக்கரசர் புராணத்தில் மிக அழகாக விரித்துரைக்கப் படுகின்றன.

திருத்தொண்டர் புராணத்தின்படி அப்பர் பழையாறைக்கு மூன்று முறை வருகிறார். முதல் முறை திருநாகேச்சுவரத்திலிருந்து திருச்சத்தி முற்றம் போகும் வழியில் பழையாறையைக் கடக்கிறார்.[1] இரண்டாவது முறை திருநல்லூரிலிருந்து திருவலஞ்சுழி செல்லும் வழியில் பழையாறை வருகிறார்.[2] முதல் முறை அவர் பழையாறை வருவதைக் குறிக்கும் சேக்கிழார்,

> "செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையாறு எய்தி
> திருச்சத்தி முற்றத்தைச் சென்று சேர்ந்தார்",

என்றுதான் குறிக்கிறார். ஆனால் இரண்டாம் முறையோ,

> "நல்லூரின் அம்பர்அருள் பெற்றுப்போய்ப் பழையாறை
> பல்லூர்வெண் தலைக்கரத்தார் பயிலுமிடம் பலபணிந்து
> சொல்லூர்வண் டமிழ்பாடி ....,"

---

1. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 292., பாடல் எண். 1457.

2. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 388., பாடல் எண். 1480.

என்று சிறப்பித்துக் கூறுகிறார். முதல் முறை கடக்கும் வழியாக மட்டுமே பழையாறை அமைந்தது. ஆனால் இரண்டாம் முறையோ அப்பாடிகள் பழையாறையில் உள்ள சிவத்தலங்கள் பலவற்றைக் கண்டு மகிழ்ந்து பாடியும் இருக்கிறார். சேக்கிழார் பெருமான் காலத்தில் அப்பரடிகள் இத் தலங்களைக் குறித்துப் பாடிய பாடல்கள் இருந்திருத்தல் வேண்டும். இல்லையென்றால் சேக்கிழார் முதல் முறை கூறியது போலவே அப்பர் பழையாறையைக் கடந்ததாகக் கூறி முடித்திருப்பார். இப் பகுதிக்கு உரையெழுதிய சிவக்கவிமணி அவர்கள், 'பழையாறையில் பற்கள் வெளித்தோன்றவுள்ள, வெண் தலையோட்டினைக் கையிலேந்திய சிவபெருமான் எழுந்தருளிய பல கோயில்களையும் பணிந்து, நல்ல சொற்களால் நிரம்பிய வளப்ப முடைய திருப்பதிகங்களைப் பாடி', என்று கூறுகிறார்.[3] பல கோயில்கள் என்பதற்கு விளக்கம் தரும் இடத்தில் 'பழையாறையில் ஆறை, ஆறை வடதளி, ஆறைமேற்றளி என்ற மூன்று சிவத்தலங் கள் உள்ளன. ஆதலின் பயிலும் இடம் பல என்றார்', என்று கூறுகிறார்.[4]

திரு. சிவக்கவிமணியவர்கள் குறிப்பிடும் தளிகள் தவிர அங்கு ஆறைத் தென்றளி என்றும் ஒரு சிவத்தலம் இருந்தமைக்குக் கல் வெட்டுச் சான்றுகள் உள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில் பணி யாற்றுவதற்காக முதலாம் இராசராசனால் தஞ்சைக் கோயிலைச் சார்ந்த தளிச்சேரிகளில் குடியேற்றப்பட்ட பதியிலாருள் இத் தென் தளிக்குரியவர் நால்வராவர்.

இக் கல்வெட்டுச் சான்றைக்கொண்டு நோக்கும்போது பழையாறையில் ஆறை, ஆறை வடதளி, ஆறைத் தென்றளி, ஆறை மேற்றளி என்னும் நான்கு கோயில்கள் இருந்தன என்பது திண்ணம். இவற்றுள் ஆறை, ஆறை வடதளி, ஆறை மேற்றளி என்பன சமய குரவர்களால் குறிக்கப்படுகின்றன. ஆனால் ஆறைத் தென்றளி குறிக்கப்பெறவில்லை. வைப்புத் தலமாகக்கூட இதை அவர்கள் குறிப்பிடாதது விந்தையாக உள்ளது. ஒன்று இத் தென்றளி குறித்து அவர்கள் பாடிய பதிகங்கள் நமக்குக் கிடைக்காமல் போயி ருக்க வேண்டும், அல்லது இத் தென்றளி சமய குரவர்களுக்குப் பிற் பட்ட காலத்தில் எடுக்கப்பட்டு, காலப்போக்கில் சுவடழிந்து போயி ருக்க வேண்டும்.

---

3. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 338., பாடல் எண். 1480.

4. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 338.

சேக்கிழாரின் பாடல்வரிகள் அப்பர் தம்முடைய இரண்டாவது பழையாறைப் பயணத்தின் போது, அங்குள்ள பல தளிகளையும் கண்டு வணங்கியதாகக் கூறுகின்றன. அது உண்மையானால் அப்பர் ஆறை வடதளியைத் தம் இரண்டாம் பயணத்திலேயே கண்டு வணங்கியதாக அமையும். அப்போது ஆறை வடதளி சிவத்தல மாகத்தான் இருந்திருக்க முடியும். ஏனென்றால் சம்பந்தரும் ஆறை வடதளியைக் கண்டு பாடியதாகச் சேக்கிழார் குறிக்கிறார்.[5] அப்பரும் சம்பந்தரும் மூன்று முறை சந்திப்பதாகப் பெரியபுராணம் கூறுகிறது. முதல் சந்திப்புக்குப் பிறகுதான் அப்பர் முதல் முறை யாகப் பழையாறைக்கு வருகிறார். அவரது இரண்டாவது பழை யாறைப் பயணம், அவரும் சம்பந்தரும் இரண்டாம் முறையாகத் திருப்புகலூரில் சந்திப்பதற்கு முன் நிகழ்கிறது. சம்பந்தர் ஆறை வடதளியைக் கண்டு பாடுவதும் இந்த இரண்டாம் சந்திப்புக்கு முன்பே நிகழ்ந்துவிடுவது நினைவுகொள்ளத் தக்கது. எனவே இரு பெருமக்களும் ஏறத்தாழச் சில திங்கள் இடைவெளியில்தான் ஆறை வட தளியைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். இந்நிலையில் அப்போது ஆறை வடதளி சிவத்தலமாகத்தான் இருந்திருக்க முடியும் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமிருக்க முடியாது.

மூன்றாவது முறை பழையாறை வரும்போது அப்பர் திருவாவடு துறையிலிருந்து வருகிறார். இப் பயணம், அப்பரும் சம்பந்தரும் இரண்டாம் முறையாகச் சந்தித்துப், பல தலங்களைக் கண்டு மகிழ்ந்து, இருவரும் பிரிந்த நிலையில், அப்பர் தனியராய் மேற்கொள்வதாகும். இப் பயணத்தின் போதுதான் அப்பர் ஆறை வடதளியைக் கண்டு பாடுவதாகக் கோயிலின் பெயரையே கூறிச் சேக்கிழார் பாடல்கள் பேசுகின்றன.

> "செய்ய சடையார் பழையாறை எய்த அதனிற் செல்பொழுதின்
> மையல் அமணர் மறைத்தவட தளியின் மன்னும் சிவனாரைக்
> கைகள் கூப்பித் தொழுதருள ...",[6]

என்று ஆறை வடதளியை அப்பர் கண்டு போற்றிய வரலாறு தொடங்குகிறது. ஆறை வடதளி இறைவனை வணங்கக் கைகூப்பித் தொழுத அளவில் நாவுக்கரசர் திருவுள்ளத்தில் ஒரு நெருடல் ஏற் படுகிறது. உடன் அங்கிருந்தவர்களிடம் உசாவ, அது சமணர்களின் பொய்கொள் விமானம் என்று அவர்கள் விளக்குகிறார்கள். அது

---

5. திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் வெளியீடு, பக். 274., பாடல் எண். 399.

6. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 492., பாடல் எண். 1559.

கேட்ட அப்பரடிகள் மனம் ஆற்ருமையால் புழுங்குகிறது. அந்தப் பொய்கொள் விமானத்தின் அண்மையில் ஓரிடத்தில், சிவபெருமானின் சிவந்த திருவடிகளை நினைத்தபடி, 'அறிவிலிகளாகிய சமணர்கள் வஞ்சனையினுல் மறைத்த வஞ்சத்தை ஒழித்து, சைவத்திறம் விளங்காது மறைத்த அமணர்தம் திறத்தை அழிப்பீராக', என்று வேண்டிப் பணிந்திருந்தார். 'இறைவன் திருமேனி வண்ணம் கண்டு வணங்காது இவ்விடம் அகலேன்' என்று இறைவனிடம் முறையிட்டு, உறுதியுடன், எண்ணியது எண்ணிய வண்ணம் முடிக்கும் நாவுக்கரசர் அங்கே உண்ணு நோன்பு தொடங்கினுர். சிவபெருமானும் அதனைத் தமது திருவுள்ளத்தில் கொண்டு, நாவுக்கரசர் தம்மை வணங்கச் செய்ய வேண்டுமென விரும்பி, பழையாறை மன்னன் கனவில் தோன்றிச் செய்தி சொல்ல அருள்மனம் கொள்கிருர்.

''அறிவில்லாத அமணர்கள் நம்மை மறைக்க நாம் இருந்தோம்'', என்று கூறி, அவ்விடத்தைக் காணக்கூடிய அடையாளக் குறிகளை அருளிச்செய்து, ''நம்மை நாவுக்கரசர் வணங்க வாய்ப்பாக அமணர்களை அழித்து அவ்விடத்தினின்றும் நீங்கச்செய்து போக்குவாயாக'', என்று அருள்புரிந்தார். மன்னன் துயில் நீங்கி எழுந்து, தான் கண்ட கனவினை நினைவுகூர்ந்து, தன் கரங்களைத் தலைக்குமேல் தூக்கிக் கூப்பி வணங்கித் தன் கனவில் வந்த வியப்பான காட்சிகளைத் தன் அமைச்சர்களுக்குக் கூறினுன். அவர்களுடன் தானும் புறப்பட்டு, இறைவன் அருளிச செய்த அடையாளக் குறிகளால் வழி கண்டு, நாவுக்கரசர் இருந்த இடம் அடைந்தான். சமணராகிய கீழ்மக்கள் செய்த வஞ்சனைதனை வெளிப்படுத்திய திருத்தொண்டராகிய நாவுக்கரசரின் திருவடிகளை வணங்கிப் பின் அவ் வேந்தன் அமணர் கூட்டத்தை அழித்தொழித்தான்.

யானையால் அழிக்கப்பட்ட குறுந்தூறுபோல அரசனுடைய ஏவலர்களால் சாடப்பட்ட சமணர்கள் ஆயிரவரும் ஒழிந்தனர். பின் அரசன் சமணரின் பொய்கொள் விமானத்தை மாற்றி, ஈசர்க்குரிய விமானமாக்கினுன். சிவ ஆகம முறைப்படி வழிபாடுகளை ஏற்படுத்தி, அவற்றுக்குரிய கொடைகளையும் அளித்துப் பின் நாவுக்கரசரை வணங்கி நின்றுன். நாவுக்கரசரும் அகமகிழ்ந்து, கோயிலுள் நுழைந்து இறைவனை வணங்கிப் போற்றினுர்.

இந்த மூன்ருவது பயணத்தில் நடந்த நிகழ்ச்சிகளால் வெளியாகும் செய்திகள் சில புதுமைகளை நமக்குத் தெளிவாக்குகின்றன. சில ஐயங்களை நமக்கு உண்டாக்குகின்றன. அவற்றை ஒவ்வொன்ருகப் பார்ப்போம்.

இப்போது எதற்கெடுத்தாலும் உண்ணுநோன்புப் போராட்டங்கள் நடைபெறுகின்றன, இவ்வகை அறப்போருக்கு அடிகோலியவர் அண்ணல் காந்தியடிகள் என்பதை நாமறிவோம். அவர் காலத்தில் உண்ணுநோன்புப் போராட்டம் உண்மையிலேயே அறப் போராக இருந்தது. பிறர் நன்மைக்காகத் தம்மை வருத்திக் கொள்ளும் ஓர் உயர்ந்த பண்பின் அடிப்படையில் காந்தியடிகளின் இப் போராட்டம் அமைந்தது, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமோ, உண்ணுநோன்புப் போராட்டம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே நடந்ததாகக் காட்டுகிறது. அப்பரடிகள்தாம் வரலாற்றில் முதன்முதலாக உண்ணுநோன்பை ஒரு போராட்டக் கருவியாகக் கைக்கொள்கிறார். இது எத்தனை வியப்பான செய்தி! சல்லேகனம் என்பதும் வடக்கிருத்தலும் போராட்டமல்ல. அவை உயிர்துறக்கக் காக்கும் உண்ணுநோன்பாகும். ஆனால் அப்பரின் உண்ணுநோன்பு, ஆறை வடதளியைக் காத்து, அதைச் சமணர்களிடமிருந்து மீட்டு, மீண்டும் சிவபெருமானின் பெருமைகொள் தலமாக்கி மகிழ வேண்டுமென்பதற்காகவே தொடங்கப்பெற்றது. ஓர் அறச்செயலுக்காக, இறைவனைப் பொய்கொள் விமான மறைப்பிலிருந்து வெளிப்படுத்த வேண்டுமென்பதற்காக அப்பர் நிகழ்த்திய இந்த உண்ணுநோன்புப் போராட்டம் நினைத்து நினைத்துப் போற்றற்குரியது. தன்னை வருத்திக் கொண்டு நியாயமும் நேர்மையும் கிடைக்கப் பிறருக்காகப் போராடும் புதிய வழிக்குப் பாதைபோட்ட முதல் மனிதர் அப்பர்தாம் என்பதை நினைக்கையில் மனம் சிலிர்த்துப்போகின்றது.

இனி ஐயங்களுக்கு வருவோம், இவை சில கேள்விகளாக வடிவம் கொள்கின்றன.

(i) அப்பர் இரண்டாம் முறை பழையாறை வந்தபோது வணங்கிய தலங்களுள் ஆறை வடதளியும் ஒன்று?

(ii) ஆறை வடதளியை அப்பர் தம் இரண்டாவது பயணத்தில் வணங்கியது உண்மைதானென்றால் அப்போது அது எந்நிலையில் இருந்தது? சிவத்தலமாக இருந்ததா?


(iii) அப்பரின் இரண்டாவது பயணத்துக்கும் மூன்றாவது பயணத்துக்கும் இடைப்பட்ட கால அளவு அதிகமாக வைத்தாலும் மூன்றாண்டுகளுக்குமேல் இருக்காது. இந்த இடைப்பட்ட காலத்தில் சமணரின் செயலாக்கங்களும் சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளும் எந்நிலையில் இருந்தன?

(iv) சமணர்கள் ஒரு சிவத்தலத்தை மறைத்துத் தங்கள் பள்ளியாக்கிக்கொள்ளும் வரை அப் பகுதி மக்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?

நடகஅ

(v) ஒரு மன்னன் தன் பகுதியில் நடக்கும் இது போன்ற நடவடிக்கைகளை எப்படிக் கேள்விப்படாதிருந்தான்? அல்லது கேள்விப் பட்டும் வாளா இருந்தானா?

(vi) சமணர்கள் மறைத்தது கோயில் விமானத்தை மட்டும் தானா? அல்லது கழகப் பதிப்பான பெரியபுராண வசனத்தில் கூறப் படுவதுபோல் இறைவனின் திருமேனியையே கோயிலில் இருந்து எடுத்து வெளியே கொண்டுபோய் மறைத்து வைத்தார்களா?



அப்பர் பாடிய ஆறை வடதளியின் முகப்பு

இக் கேள்விகளுக்குரிய விடைகளை முறைப்படி ஆராய்வோம். அப்பர் முதன்முறை வந்தபோது அவ்வூர் அவருக்குக் கடக்கும் வழியாக மட்டுமே பயன்பட்டிருக்கிறது. இரண்டாவது முறை வந்த போது பழையாறையில் பல கோயில்களைக் கண்டு வணங்கிப் பாமாலைகள் புனைந்ததாகச் சேக்கிழார் கூறுகிறார். இப்போதுள்ள சான்றுகளின்படி, பழையாறையில் அப்போது இருந்திருக்கக்கூடிய கோயில்கள் நான்குதான். ஆறை, ஆறைவடதளி, ஆறைத் தென்தளி, ஆறை மேற்றளி என்னும் நான்கனுள் அப்பர் மூன்றை யேனும் தரிசித்திருந்தால்தான் சேக்கிழார் குறிக்கும் 'பல' என்ற சொல்லுக்குப் பொருள் பொருந்தும். ஆறைத்தென்தளி சமய குரவர்களால் குறிக்கப்படாமையால், அவர்கள் காலத்தில் அக் கோயில் இருந்ததா, இல்லையா என்ற உறுதிப்பாடு இல்லை. அதனால் அதை விடுத்துப் பார்க்கையில் மீதமிருக்கும் மூன்று தளிகளையும் அப்பர் கண்டு வழிபட்டதாகக் கொள்ள நேரிடும். அப்படியானல் அப்பரடிகள் தம்முடைய இரண்டாவது பழையாறைப் பயணத்திலேயே ஆறை வடதளியைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்.

———

(தொடரும்)

பெண்மைக் காவலர்—திரு. வி. க.

[டாக்டர் சரளா ராசகோபாலன், எம், ஏ., பிஎச். டி.,

தமிழ்த்துறை, இராணிமேரிக் கல்லூரி, சென்னை.]

(முன் இதழ் உ௬௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வி க. அவர்களின் உள்ளம் பெண்மையைப் போற்றிய தோடு அமையவில்லை: அடிமைச் சேற்றில் உழன்றுகொண்டிருக் கும் அவர்களைக் கரையேற்றவும் விரும்பியது அக்காலத்தில் பெண்களிடை வேசையர் என்ற பிரிவை ஏற்படுத்தியமை, கணவனை இழந்த நிலையில் பெண்மைக்கு இழைக்கப்படும் கொடுமை, ஆகி யவை குழந்தைமணக் கொடுமை ஆகியவற்றைத் திரு. வி க. அவர்கள் கடுமையாக எதிர்த்தார். சமுதாயத்தைச் சீர்திருத்த கலப்புமணத்தையும் காதல் மணத்தையும் ஆதரித்தார். ''எளிய சகோதரிமார் நலங்கருதி ''யாமுனபூரண திலகம்மாவால் நடத்தப்பட்ட யுவதி சரணாலயம்'' ஆக்கம் பெறல் வேண்டுமென்று முயன்றேன். நவசக்தி வாயிலாக விண்ணப்பஞ் செய்தேன். சீர் திருத்த மணங்களுக்கு ஊக்கமூட்டினேன்; கலப்பு மணத்தை வலியுறுத்தி வந்தேன்'' (வா. கு. ப. 736); என்று தாம் சகோதரி களுக்காகச் செய்த தொண்டினைக் குறிப்பிடுகிறார்.

பரத்தையர் ஒழிப்பு:

திரு. வி. க. பரத்தையர்களை, சகோதரிமார் என்று நினைத்தும், பேசியும் எழுதியும் வந்தார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். திரு. வி. க. வாழ்ந்த காலத்தில் மூவலூர் இராமாமிர்த அம்மையார் பெருந்தொண்டாற்றி வந்தார். பெண்ணுலகில் நேர்ந்த வழுக்களைப் போக்க வந்த கற்பகம் இராமாமிர்தம் என்று அவரைப் போற்றினார் திரு. வி க. அவ்வம்மையார் மாயூரம் என வழங்கும் மயிலாடுதுறை யில் 1925இல் ஒரு மாநாடு கூட்டினார். அம் மாநாட்டில் சொற் பொழிவாற்றிய திரு. வி. க. அவர்கள் தம் சொற்பொழிவையே விமரிசனம் செய்கிறார். ''பலநாள் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் மிடைந்து, 'குமுறிக் குமுறி' வெளிவந்தன. யான் ஒருபோழ்து எரிமலையானேன்; மற்றொரு போழ்து பொய்கையானேன்; முடிவில் தென்றலானேன்; வழுக்கி விழுந்தவரின் உலக வரலாற்றைச் சுருங்கச் சொன்னேன்; நமது நாட்டில் அவர்தம் வரலாறு பிறந்த விதத்தை ஒருவாறு விளக்கினேன்; அவர் கோயில் புக நேர்ந்தமை யைக் கூறினேன்; அவர் கண்ட இசையும் நாட்டியமும் வளர்ந்த

திறத்தை எடுத்துக் காட்டினேன். இவர்தம் நிலை குலைந்தமைக்கு ஏதுவாக நின்றவைகளை வெளியிட்டும், இந்நாளில் கண்மூடி வழக்கங்களை மண்மூடச் செய்தல் வேண்டுமென்றும், பொட்டுக் கட்டலை அறவே தொலைக்க முற்படல் வேண்டுமென்றும், யாவரும் மண வாழ்வில் தலைப்பட உறுதிகொள்ளல் வேண்டுமென்றும் அறிவுறுத்தினேன்'' என்று திரு. வி. க. அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்பில் (ப. 733) கூறுகிறார்.

கபாலீச்சுவரத்தில் நீறணிந்து இறைவனைத் தொழவருகின்ற தாசிகளைப் பக்தர்கள் விலங்குணர்வுடன் நோக்குதலை நினைந்து திரு. வி. க. அவர்கள் வருந்துகிறார். இச் சகோதரிகள் பொட்டுக் கட்டிப் பதியிலார் என்ற பெயரைத் தாங்குதலை ஆசிரியர் வெறுக்கிறார். பதியிலார் என்ற பெயரே இவர்களைப் பாழ்படுத்துகிறது. இவர்கள் பதியுடையவராதல் வேண்டும். இவர்களை அஞ்சா நெஞ்சுடன் மணக்க ஆடவர் முன்வருதல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். இவர்களை மணப்போரே உண்மையான சீர்திருத்தக் காரர்; நாட்டுக்கு நலம் செய்வோர் (ப. 731) என்று தம் அவாவினைத் தெரிவிக்கிறார். ஆண்கள் தூய்மையுறும் நாளே பெண்மையின் கறை ஒழியும் நாள் என்று கூறும் திரு. வி. க. அவர்கள் இவ் விழிவைப் போக்க ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறார். (பெ. பெ. ப, 282)

கைம்பெண்களின் நிலையை நினைக்கும் திரு. வி. க. வின் உள்ளம் குழைகிறது. நெக்குருகுகிறது; அதனால் அவர் இப் பாழும் நாட்டில் ஏன் பிறந்தோம் என்று வேதனைப்படுகிறார். (பெ. பெ. 296) ''பெண்மகள் கைம்மை எய்தியதும் அவள்பாலுள்ள இயற்கை ஓடி விடுகிறதா? உயிர் போய் விடுகிறதா? கடவுள் மறைந்து விடுகிறாரா? படைப்பில் என்ன குறைவு ஏற்படுகிறது?'' (பெ. பெ. ப. 297) என்று மூடர்களை நோக்கி வினாத்தொடுக்கும் திரு. வி. க. அவர்கள் கைம்பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் சுட்டுகிறார். ''விதவைகள் எதிரில் வரக்கூடாதாம். கூட்டங்களில் போகக் கூடாதாம். நல்வினைகளில் தலைகாட்டக் கூடாதாம். உடையையும் உணவையும் சுருக்கல் வேண்டுமாம். அப் பெண் மூதேவியாய் விட்டாளாம்'' என்று திரு. வி. க, அவர்கள் வயிறு எரிந்து கூறுகிறார். கைம்மை நிலையில் பெண்மை தாய், தந்தை, உடன் பிறந்தவர், சுற்றத்தாரால் அவமதிக்கப்படும் நிலைமையில் தற்கொலை செய்துகொள்ளுதல், வீட்டை விட்டு ஓடி அழிதல், சிறு தொழில்கள் செய்து வயிற்றை நிரப்பி மரணத்தை எதிர்நோக்கி வாழ்தல் ஆகிய கொடுமைகளை நினைத்து, ''என்னவென்று சொல்வேன், எவ்வெழுத்தால் எழுதுவேன்'' (பெ. பெ. 297) என்று வேதனைப்படுகிறார்.

''ஆணுக்கு ஒரு நீதி; பெண்ணுக்கு ஒரு நீதி?'' என்ற வினு வினைத் தம் மனத்துள் எழுப்பித் தம் மனைவி மறைந்ததும் மகளி ரைப் போலவே கைம்மை நோன்பு நோற்ற திரு. வி. க. அவர்கள் துணையிழந்த நிலையில் ஆடவர்களுக்கு மட்டும் கைம்மைக் கொடுமை இல்லாமையும் மறுமண உரிமை இருப்பதையும் கண்டிக்கிறுர் (பெ. பெ. 297).

விதவைத் திருமணத்தை எதிர்க்கும் மூடர்களைக் கண்டிக் கிறுர் திரு. வி. க. ''பெண் கைம்மை எய்தியவுடன் இயற்கை வேட்கையுணர்வு அவளைவிட்டு நீங்கி விடுமா? வேட்கையை அடக்க இயலாமல் சாத்திரம் சாத்திரம் என்று கூறிக்கொண்டு இருட்டறையில் விபச்சாரம் செய்து கருச்சிதைவு செய்வதை விடத் திருமணம் செய்வதால் பாவம் உண்டாகுமா?'' என்கிறுர்.

மகளிருக்கு இரங்குதலை மட்டும் செய்யும் திண்ணைப் பேச்சு வீரராகத் திரு. வி. க. அவர்கள் இருந்ததில்லை. செயல் வீரராகத் தீர்வு காண்பதில் முனைந்திருக்கிறுர்; மகளிர் ''கணவனுடன் கூடி மெய்யுறல் நிகழ்வதற்கு முன்பு கைம்மை எய்திஞல் திருமணம் செய்துகொள்ளலாம்; மெய்யுறல் நிகழ்ந்திருந்தால் திருமணம் தேவையில்லை. அப் பெண்களின் பாதுகாப்பிற்கு அறச்சாலைகள், கல்விச்சாலைகள், தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பெறுதல் வேண்டும்'' என்றும் திரு. வி. க. அவர்கள் கைம்பெண்களுக்கு வழி கூறுகிறுர். (பெ. பெ. 303, 304).

குழந்தை மணக் கொடுமை :

குழந்தை மணக் கொடுமையைத் திரு. வி. க. அவர்கள் கடுமையாகவே எதிர்க்கிறுர். ''ஓராண்டுக் குழந்தை—அதற்கு மணமென்ன தெரியும்? பச்சிளம் குழவிக்குப் பெண் ஆண் பால் வேற்றுமையாதல் தெரியுமா? அக் குழந்தைக்குத் திருமணம். அது கைம்மை எய்திஞல் அதற்குங் கட்டுப்பாடு! அக் குழவி உலகை அறிந்ததா? இல்லையே! அது தாய்மையென்னும் சீரிய நிலையை அடையாமல் அன்றே ஒழிகிறது! இது கடவுள் கருத்தாகுமா?'' (பெ. பெ. 297) என்று மனம் வெதும்புகிறுர்.

பால் மணம் மாருக் குழந்தைகள் கைம்மை எய்துதலைக் கொலை யாகவே நினைக்கிறுர். ''இக் கொலைக்குப் பொறுப்பு யாது? இந்து மதமன்றே? இக்கால இந்து மதத்தைப் பெண் கொலை மதம் என்று கூறல் மிகையாகாது'' (பெ. பெ. 299) என்று தாம் விரும்பும் இந்து மதத்தையே கொலை மதம் என்று கூறும் அளவிற்குக் குழந்தை மணக் கொடுமை இவர் உள்ளத்தைப் பாதித்துள்ளது.

''பால்மண மாரு இளங் கைம்பெண்கள் உற்ற வயதடைந்து மறுமணம் செய்துகொள்வது அறமேயாகும். அதற்கு அறிஞர் துணைசெய்தே தீரல் வேண்டும்'' (பெ. பெ. 301) என்று இளங் கைம்பெண்களுக்குத தீர்வு காண்கிறுர்.

கலப்பு மணம்:

சமுதாயத்தில் சாதியை ஒழிக்கக் கலப்பு மணமே சிறந்தது என்பதை உணர்ந்தவர் திரு. வி. க. அவர் தேச பக்தன் ஆசிரியராக இருந்த சமயததில் மற்றவா எதிர்தத போதும் அருண்டேல் ருசமணி திருமணததை ஆதரிக்கவே செய்தார். மணமககளேச் சென்னைத் தொழிலாளர் சஙகத்திற்கு அழைத்துச் சென்று வாழ்த்திஞர். சாதி நோயை அறவே நீகக வலல மருந்து கலபபு மணமதான் என்பது அவரின் உறுதியான முடிவு. அதறகாகவே அவர் பல கலபபு மணஙகளேச செய்து வைததார். கலபபு மணம் செய்விக்கும் தணி யாத வேட்கையால் பல பிறவிகளேயும் தாங்க விரும்புகிறுர் அவர். (வா. கு. ப. 779)

கலப்பு மணம் உலகம் முழுவதும் நடைபெறல் வேண்டும் என்ற வேட்கையுடையவர் அவா. அதற்காகத் தலைவர்கள் பலதிற இயக்கங்களே ஏற்படுத்திக் கலப்பு மணம் செய்தல் வேண்டும் என் கிறுர். பளளிகள், அரங்கங்கள், மகாநாடுகள், நகரசபைகள், சட்ட சபைகள், அரசு ஆகிய அனேததும் கலப்பு மணத்திற்கு ஆக்கம் தரும் காலமே நல்ல காலம். நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் கலபபுத் திரு மணத்தை உட்கொண்டிருத்தல் வேண்டும் எனறு கலப்புத திரு மணத்தை வறபுறுத்துகிறுர். (வா. கு. ப. 779)

காதல் மணம்:

சாதியை ஒழிக்கக் கலப்பு மணம் வேண்டும். கலப்பு மணத் திற்கு அடிப்படையே காதல்தான் என்ற முடிவுக்கு வந்த அவர் காதல் மணத்தை ஆதரித்தார். வெள்ளேயனேபபற்றிப் பேசவே அஞ்சிய காலத்தில், காதலுககாக முடியையே துறந்த எடவர்டை அவர் பெரிதும் பாராட்டுகிறுர். ''பெண்ணின் பெருமையுணர்ந்த பெருந்தகையாளர். அவர் பெண்ணின் பொருட்டு ஒரு பெரும் பதவியையே இழந்தவர்.'' (முடியா? காதலா? சீர்திருத்தமா? ப. 107) ''காதல்வழி மணம் நிகழ்தல் வேண்டும்; காதலறற மணம் மணமாகாது. அது பிணம். காதலற்ற வெற்றுடல் சேர்க்கை பெறுவோர் இவ்வுலக வாழ்வில் இறநதவரேயாவர். அப் பிண வாழ்விலும் நரகம் மேலானது'' (ப. 120) எனறு காதல் மணத்தின் சிறப்பைப் புலப்படுத்துகிறுர்.

பண்டைக்காலத்தில் காதல் மணம் நிகழ்ந்துவந்தமையான் தீயொழுக்கம் பெருகவில்லை; பெண்ணுலகுக்குஞ் சிறுமை நேரவில்லை. காதலின்பம்தான் மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தும் (தமிழ்ச்சோலை ப. 108) என்ற கொள்கையராய்த் திகழ்ந்தார் அவர்.

நிறைவு உரை :

மாதருக்குக் கல்வியறிவு கிட்டினால், அவர்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்பதனால் முதல் பெண்கள் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினார் சவேரராயலு நாயக்கர். மங்கையரின் முன்னேற்றத் திற்காகப் பெண்மதி மாலையைப் பாடினார் வேதநாயகம் பிள்ளை. புதுமைப் பெண்ணைப் படைத்தார் தேசிய கவி பாரதியார். அவரின் வழிநடந்து அரிவையரின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டார் புரட்சிக்கவி பாரதிதாசன். பெண்களின சுயமரியாதைக்கும் தொண்டாற்றினார் தந்தை பெரியார். இந்தப் பெண் விடுதலைப் பெரியோர் பட்டியலில் தமிழ்த்தென்றல் திரு. வி. க. வும் தனியான இடத்தைப் பெறுகிறார். பெண்ணின் பெருமையை இறவா இலக்கியமாகப் படைத்தார்.

அவரது சொல்லாலும் செயலாலும் மெல்லியலாரின் நல்வாழ்வில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவரால் ஏற்றம் பெற்ற இனம் அவரை நெஞ்சில் வைத்துப் போற்ற வேண்டியது முறைமை. பெண்மையை இறைமைக்கு உயர்த்திய ஏந்தலை என்றும் தொழுது அவர் புகழ் பரபபுவதே கடமை.

திருச்சி மூதறிஞருக்குப் பாராட்டு விழா

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் மேல்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றம் 11—3—84இல் 23ஆம் ஆண்டு விழாவும், பவள விழாக் கண்ட தமிழிசைச் செவ்வேள் திரு. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்களுக்குப் பாராட்டு விழாவும், சுந்தரம் அம்மாள் கலையரங்கில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. கே. பழனியாண்டிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கட்குத் தமிழிசைச் செவ்வேள் பிள்ளை அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். அன்னாருக்கு வாழ்த்திதழ் வழங்கியும், மலர்மாலை அணிவித்தும், பொன்னாடை போர்த்தியும் சிறப்புச் செய்தனர். மாணிக்கவாசகம் அவர்கள் ஏற்புரை ஆற்றி மாணவ மாணவியர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

தொடை வகை

[திருமங்கலம் புலவர், வை. தங்கமணி]

(முன் இதழ் உ௯௦ ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்முறையில் கொண்டாலும் ஒன்பது + பத்து; ஒன்பது + நூறு; என்பது தொண்ணூறு, தொள்ளாயிரம் என்று புணருவது ஏற்புடைத்தாக இல்லை. தொண்டு + பத்து; தொண்டு + நூறு; தொண்பது, தொண்ணூறு என்று புணருவது பொருத்தமுடையதாக இருக்கிறது. ஆகையால் ஒன்பது என்னும் எண்ணுப் பெயர் எவ்வகையிலும் பொருந்துவது அன்று. ஒன்பது என்ற இடத்தில் தொண்டு தான் இருக்கவேண்டும் என்று வாதிடுவர் சில ஆய்வாளர்கள்..

அப்படி என்றால் 'தொண்டு' என்ற சொல்லை ஏன் தொல்காப்பியம் புணரியலில் தொல்காப்பியர் எடுத்தாண்டு இலக்கணம் கூறவில்லை என்ற வினவிற்கு அவ்வாய்வாளர்கள் 'தொண்டு' என்ற சொல் தொல்காப்பியருக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே வழக்கற்றுவிட்டது. 'தொண்டு' நின்ற இடத்தில் ஒன்பது ஆட்சி பெற்றுப் பீடுநடைபோட்டு வந்தமையால் 'குற்றியலுகரப் புணரியலில்' 'தொண்டுக்கு' இலக்கணம் கூருது விட்டுவிட்டார் என்று கூறுவார்கள்.

வடவேங்கடம்-தென்குமரி உள்ளிட்ட-தமிழ்கூறு நல்லுலகத்து-வழக்குஞ் செய்யுளும் ஆய்ந்து இலக்கணம் செய்துள்ளேன் என்பதற்கும்—

மலைபடுகடாம் ஆசிரியரும், பரிபாடல் ஆசிரியரும் ஆசிரிய மாலை ஆசிரியரும் 'தொண்டு' என்ற சொல்லை எடுத்தாண்டிருப்பதற்கும் இவர்கள் என்ன சமாதானம் கூறுவார்களோ அறியோம்.

எனினும் 'தொண்டு' என்ற சொல் காப்பியருக்கு வெகு காலத்திற்கு முன்பே வழக்கற்றுவிட்டது என்றால் அச் சொல் காப்பியருக்கு எக்காலம்வரை ஆட்சிபெற்று, பின் வழக்கிழந்தது என்று அறுதியிட்டுக் கூறப் போதுமான இலக்கியச் சான்றுகளோ இலக்கணச் சான்றுகளோ இன்றில்லை. பின்னர் எதனை வைத்துக் கொண்டு வாதிடுகின்றனர்? சான்றாக நின்றவைகளை வாரணம் கொண்டதந்தோ வழிவழி பெயரும் மாய!

இன்றுள்ள தமிழ்மொழியில் மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் ஒன்றுதான். காப்பியருக்கும் பிந்தியவையே பத்துப்

பாட்டும் எட்டுத்தொகையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் பிறவும். ஆகையால் இக்கருத்துக்குச் சங்க நூல்களையும், சங்கம் மருவிய நூல்களேயும் சான்று கூறத் துணைகோடல் சால்புடைத்தன்று.

இனி, பிறிதொரு சாரார் தொல்காப்பியருக்கு முன்னும் சரி—பின்னும் சரி, 'தொண்டு' என்னும் சொல் வழக்கற்று விடவில்லை. இச் சொல் காப்பியருக்கு முன்னும் ஆட்சிபெற்றிருந்தது—அவருக்குப் பின்னும் ஆட்சிபெற்றிருந்தது என்று கூறுவதோடு—

'தொடித் திரிவன்ன தொண்டுபடு திவவு'

என்ற மலைபடுகடாம்—இருபத்தொராம் அடியையும்;

'ஏழு என, எட்டு என, தொண்டு என'

என்ற கடுவன் இளவெயினனார் பாடல்—எழுபத்தொன்பதாம் அடியையும் சான்று காட்டுவதோடு—தொல்காப்பியரே 'தொண்டு தலையிட்ட' என்று செய்யுளியலில் கூறுகிறாரே என்றெல்லாம் எடுத்துக்காட்டுகள் தந்து வாதிடுவார்கள்.

'தொண்டு' வழக்கிழந்த சொல் அன்று—காப்பியருக்கு முன்பும் இருந்தது—அவர் காலத்தும் இருந்தது—பின்னும் ஆட்சிபெற்றது. ஆகையால்தான் செய்யுளியலில் எடுத்தாண்டார்—அதன் பின் வந்தோரும் எடுத்தாண்டுள்ளனர். ஆகையால்தான் 'தொண்டு' என்ற சொல் ஆட்சியில் இருந்தது. வீழ்ச்சிச்சொல் அன்று என்பர்.

தொல்காப்பியருக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே வழக்கிழந்தது என்றாலும் செய்யுளியலில் 'தொண்டு' ஆட்சிபெற்றிருத்தலை நோக்கின் அச் சொல் அவர் காலத்தும்— அவர் காலத்துக்கு முன்னும் ஆட்சிபெற்ற சொல்தான் என்று எண்ணத் தோன்றுகிறது அன்றோ?

பத்துப்பாட்டிலும், பரிபாடலிலும் அச் சொல் 'ஒன்பது' என்னும் பொருள் தருதலால் காப்பியருக்குப் பின்னும் ஆட்சியிலிருந்த சொல்தான் அது என எண்ணலாம்.

இருந்தாலும் பின்னால் வரவர 'தொண்டு'—'ஒன்பது' என்னும் எண்ணுப் பொருளைத் தராமல் வேறுபொருள் தருதலையும் அவ்வாய்வாளர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மேலே கூறிய இருவகைக் கூற்றினையும் ஒருமுறை எண்ணிப் பார்க்க வேண்டியது உள்ளது. தொல்காப்பியர் 'தொண்டு' என்ற

சொல்லேச் செய்யுளியல் தொடைகூறும் நூற்பாவில் எடுத்தாண்டிருக்கிருர் என்பது சிலருடைய வாதம். அவர்கள் எல்லாம் 'தொண்டு' என்ற மென்றெடர்க் குற்றியலுகர எண்ணுப் பெயரைக் கூற வேண்டிய குற்றியலுகரப் புணரியலில் கூறியிருக்க வேண்டும். காப்பியர் அவ்வாறு கூறவில்லே. விட்டுவிட்டார். காப்பியர் விட்டுவிட்டதை நாம் ஏன் தொட்டுப்பார்க்க வேண்டும் என்று எண்ணித்தானே—என்னவோ நன்னூலார் உள்ளிட்ட அனைத்து இலக்கண ஆசிரியர்களும் அச் சொல்லுக்குப் புணரிலக்கணம் கூருது விட்டுச் சென்றதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

குற்றியலுகரப் புணரியலில் எண்ணுப் பெயர்ப் புணரிலக்கணம் கூறுமிடத்துக கூறி பின்னர் செய்யுளியலில் கூறியிருப்பாராயின் பொருத்தம் எனலாம். ஆனுல் செய்யுளியலில் படிஎடுத்தோரால் தவறிழைகத ஒரு சொலலே வைத்துக்கொண்டு 'தொண்டு'— 'தொணடு' என்று வாதிடுவது நன்றன்று.

செய்யுளியலில் எடுத்தாண்ட 'தொண்டு' என்ற சொல் தொண்டுதான் என்ருல் அச் சொல்லுக்குப் புணரிலக்கணம் கூருத குற்றம் காப்பியருக்கு வாராதா? நுணுகி நுணுகி - ஆய்ந்து ஆய்ந்து - எண்ணி எண்ணிச் - சொல்லும் தொல்காப்பியர் இததுணேப் பெருந் தவறு செய்வாரா? எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஆகையால் அப் பெரும்பழி தொல்காப்பியரைச் சேராதொழிய மேலே கூறிய செய்யுளியல் 96ஆம் நூற்பாவை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்! உணமை 'உளளங்கை நெல்லிக்கனியென' விளங்கும். நூறபாவின் அமைப்பினே நோக்கின் 'தொண்டு' என்ற சொல் இருக்கும் இடததில் 'ஒன்றுதல்' எனறுதான் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஒன்றுதல - தொண டானது படிஎடுததோர் செய்த பிழை எனலாம்.

அன்றி, தொண்டுதான் அவ்விடத்தில் இருக்கவேண்டும் என்ருல், பதின்மூவாயிரத்து எழுநூற்று எட்டுத் தொடைகள் என்ருகும்.

பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது தொடைகள் என்ருல் அவ்விடத்தில் 'தொணடு' என்ற சொல் இருக்கக்கூடாது - 'ஒன்றுதல்'தான் இருக்கவேண்டும்.

முதலில் ஒன்பதினேக் குறிக்கத் 'தொண்டு' என்றும் அடுத்த அடியில் ஒன்பதினேக் குறிக்க 'ஒன்பது' என்றும் கூறவேண்டுமா?

தொடைகள் இத்தனேயென்று முழுமையாகக் கூருது - பிரித்துப் பெருக்கிக் கழித்துக் கூட்டிச் சொல்ல வேண்டுமா? இல்லேயேல் இவ்வாறு கூறுதல் ஓர் அழகா?

நூற்பா யாக்குமுறை ஒவ்வொருவரும் தனித்தனியாக முறைமை அமைத்துக் கொண்டாலுங்கூட மொத்தங் கூறும்போது ஏனைய இலக்கணிகளும் ஏற்றுக்கொள்ளும் முறையில் இருக்க வேண்டும் அல்லவா? என்றால் உரையாசிரியர்களிடையே இவ்வாறு குழப்பம் ஏற்படுவானேன்? இளம்பூரணரும், யாப்பருங்கல விருத்தி பழைய உரையாரும், சங்க யாப்புடையாரும், பல்காயனாரும் ஒன்றாக இருக்க - பேராசிரியரும், நச்சரும் தனித்தனித் தொகை கூறுவானேன்? காப்பியர் கூறும் தொடைகள் இத்தனைதான் என்று முடிவுகட்டிக் கூற இயலாதுபோனது ஏன்? நான் இத்தனை கொண்டுள்ளேன் - வேறு பலரும் பலவாறு கொண்டனர்-நீங்கள் பொருந்துவன கொள்க என்று கூறுவதில் இருந்து தொடைகள் இத்தனை தான் என்று முடிவுகட்டிட இயலவில்லை போலும். இவ்வாறு பலரும் பலவாறு கூறினாலும் நச்சர் உரையைத் தள்ளியதுபோல் இளம்பூரணர் உரையையும், பேராசிரியர் உரையையும் தள்ளிவிடுவதற்கில்லை. ஏன் என்றால் நூற்பாக் கிடக்கைக்கு ஏற்புடைத்தாகச் சிறு மாற்றத்தில் நிற்பவர்கள்.

ஒன்பது + பத்து ; தொண்ணூறு ; ஒன்பது + நூறு : தொள்ளாயிரம். இம்முறை எவ்வகையிலும் ஏற்புடைத்தன்று. ஆகையால் 'ஒன்பது' இருக்கவேண்டிய இடத்தில் 'தொண்டு' என்ற சொல்லை நிலைபெற, புலவர்கள் முயன்றிருக்கவேண்டும். ஆனால் அம் முயற்சி வெற்றிபெறவில்லை என்றே கூறவேண்டும். இருந்தாலும் இம் முயற்சிகள் அனைத்தும் தொல்காப்பியருக்குப் பிந்திய முயற்சியே. ஆகையால்தான் இச் சொல்லுக்கும் காப்பியருக்கும் சம்பந்தமேயில்லை எனலாம். ஒருகால் தொல்காப்பியர் காலத்தவர் உரை கண்டு 'தொண்டு' தொண்டுதான் என்றிருப்பாராயின் ஏற்புடைத்தாக இருக்கும், அவ்வாறிருக்க அவருக்குப் பன்னூறு ஆண்டுகளுக்குப் பிந்தியவர்கள் கூறும் உரையை வைத்துக்கொண்டு தொல்காப்பியர்மீது பழிபோட முற்படலாமா?

தொட்டு நிற்பவர் இருவரிலும் அதிகமானவர்களின் ஆதரவினைப் பெற்றவர் இளம்பூரணரேயாவர். இருவரிலும் பேராசிரியர் பாடபேதம் கொள்ளவில்லை. இளம்பூரணர் பாடபேதம் கொண்டுள்ளார். ஆகையால் அவருக்கு ஆதரவு கூடிற்று.

இளம்பூரணர் 'தொண்டு' என்ற சொல்லை அப்படியே ஏற்று நூற்பாவின் இறுதியில் நிற்கும் 'ஒன்பது' என்ற சொல் அங்கே இருந்திருக்க நியாயமில்லை. 'ஒன்றுதல்'தான் இருந்திருக்கவேண்டும் என்று எண்ணி அவ்வாறு பாடபேதம் கொள்கிறார்.

அவ்வாறு பாட பேதம் கொண்டால் ; அச் சொல் காப்பியர் காலத்தும், முந்தியும் 'தொண்டு' வழக்குடைய சொல்லாகக் கருதப்படும்.

ஒன்பதினைக் குறிக்க, தன்னூல் செய்யுளியலில் எடுத்தாளப் பட்டதும், எண்ணுப் பெயராம் மென்றொடர் மொழி 'தொண்டு' என்னும் சொல்லைக் கூறவேண்டிய குற்றியலுகரப் புணரியலில் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி கூறாத குற்றம் காப்பியரைச் சேரும்.

உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் வரும் எழுத்து, சொல், பொருள் இவைகளை ஆராய்ந்து 'அறங்கரை நாவின் நான்மறை முற்றிய; அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து' என்பதும் பொருந்துமா? இவ்வாறு இலக்கணம் செய்து தனக்குப் பிழையோ பழியோ வருமாறு நடந்துகொள்வாரா? என்றால் உண்மை நிலை என்ன ? பதின் மூவாயிரத்தோடு சேர்க்க வேண்டும் அறுநூற்றுத் தொண்ணூற்றென்பதை என்று கூறுவது நல்லதா? பதின் மூவாயிரத்தோடு அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பதைச் சேர்க்க வேண்டும் என்று கூறுவது நல்லதா?

ஒருமுறை ஆற்றொழுக்காக அமைந்துள்ள காப்பியர் நூற்பாவினை மீண்டும் ஒருமுறை படித்து எண்ணிப் பார்த்தால் உண்மை நிலை பளிச்சிடுவதைக் காணலாம். 'பதின்மூவாயிரத்தோடு சேர்க்க வேண்டும் அறு நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது' எனக் கொண்டால் 'தொண்டு' நிற்குமிடத்தில், ஒன்றுதல் வர இளம் பூரணர் கொண்ட பாட பேத இடத்தில் மீண்டும் 'ஒன்பது' நிலை கொள்ளும், இவ்வாறு கொண்டால் 'தொண்டு' என்ற சொல் காப்பியர் காலத்தும் இல்லை. அவர் காலத்திற்கு முந்தியும் இல்லை என்பதைக் கொள்ளலாம்.

உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் ஆட்சி பெற்ற சொல்லைக் கண்டு கூற வேண்டிய இடமான குற்றியலுகரப் புணரியல் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியில் எடுத்துக் காட்டி ஏனைய எண்களுக்குக் கூறியது போல் விதி கூறாது. விட்டுவிட்டார் என்ற பெரும் பழியும் தொல்காப்பியர் மேல் இருந்து நீங்கும்.

தொண்டு ஆட்சிச் சொல் அன்று—தொல்காப்பியருக்குப் பின் வந்த புலவர் பெருமக்களால் பொருத்தம் கருதி மலைபடுகடாத்திலும், பரிபாடலிலும், ஆசிரிய மாலையிலும் அமைத்துக் காட்டி ஆட்சிக்கு விட்ட சொல் என்று அறியலாம்.

பாட பேதம் கொண்ட இடந்தான் வேறே தவிர பிற இலக்கணிகளின் ஆதரவினை அதிகம் பெற்றுள்ள இளம்பூரணர் கொண்ட தொடைகள் எண்ணிக்கையான பதின் மூவாயிரத்து அறு நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது வருதலையும் காணலாம்.

உரையாசிரியர் உரையே பொருந்துவது என்று ஏற்று—அவர் கொண்ட பாடபேதம்—இடத்தினை மாற்றி—மாற்றுதிருப்பின் தொல்காப்பியருக்கு வரவிருந்த பெரும் பழியினை நீக்கி அமைத்துக் காட்டும் செய்யுளியல் தொண்ணூற்று ஆறும் நூற்பாவின் புதிய வடிவினைக் காணுங்கள்.

"மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ்ஞூற் றிருடு
'ஒன்றுத லிட்ட' பத்துக்குறை யெழுநூற்று
ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே"

தொல். செய்யுளியல்: 96

இளம்பூரணர் வடிவம்:

"மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றிருடு
தொண்டு தலையிட்ட பத்துக் குறை யெழுநூற்று
'ஒன்று மென்ப' உணர்ந்திசி னோரே"

பேராசிரியர் வடிவம்:

"மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றிருடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்று
ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே!"

துணை நின்ற நூல்கள்:

1. யாப்பருங்கலம், பழைய விருத்தியுரை, பதிப்பாசிரியர் புலவர் இரா. இளங்குமரனுர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு: 1976.
2. தொல். பேராசிரியர் உரை. கழக வெளியீடு: 1951.
3. தொல். பொருள்: செய்யுளியல்: நச்சினர்க்கினியர் உரை. கழக வெளியீடு: 1965.
4. தொல். பொருள். இளம்பூரணம். கழக வெளியீடு: 1956.
5. பத்துப்பாட்டு: நச்சினர்க்கினியர் உரை உ. வே. சா. பதிப்பு: 1956.
6. பரிபாடல்: பரிமேலழகர் உரை. உ. வே. சா. பதிப்பு, 1980.


———

பாவேந்தரின் அன்னையார்

[மா. அண்ணாதுரை, எம்.ஏ., பி.லிப். எபி. பி.எச்.டி.
ஆய்வாளர், நூலகர், ஈரோடு கலைக்கல்லூரி]

பாவேந்தர் பாரதிதாசனின் வரலாறுபற்றியும் அவர்தம் படைப்புகளைப்பற்றியும் பலர் ஆய்வு செய்து வருகின்றனர். இந் நிலையில் அவருடைய வாழ்க்கைவரலாற்றில் ஏற்படும் சில ஐயப்பாடுகளைக் களைதல் இன்றியமையாதது.

பாவேந்தரின் பிறந்த நாளினைப்பற்றியும், அவருடைய அன்னையின் பெயர்பற்றியும் அறிஞர்பால் மாறுபட்ட சிந்தனைகள் உள்ளன; "பாவேந்தரின் தந்தையார் பெயரே (கனகசபை) பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது; ஒருவரின் வரலாற்றில் அவர்தம்


Du sieur [illegible], âgé de quarante-un ans, marchand,
dans la ville demeurant à Pondichéry, rue sud des tisse-
rands, lequel nous a présenté un enfant du sexe mas-
culin, né le mercredi vingt neuf avril dernier, à
dix heures et quart du soir, en sa maison, de lui
déclarant et de la dame Latchoumiammalle, née
Paroussimoudeliar, son épouse, de même caste, âgée
de vingt-huit ans, sans profession, dans la ville
demeurant au dit lieu et auquel enfant il déclare
donner le nom de Souppouratinam. Lesdites
déclaration et présentation faites en présence des
sieurs Paradipoullé, fils de feu Mouttoucaroupoullé,
de caste vellaja, âgé de quarante trois ans, mar-
chand, dans la ville demeurant à Pondichéry, rue
d'[illegible] et Candassami
naik, fils de feu Appassaminaik, de caste
[illegible], âgé de trente quatre ans, [illegible], dans
la ville demeurant [illegible] près des Blanchisseurs
tous deux amis du père de l'enfant, témoins choisis
par lui. Nous avons signé le présent acte avec
le père et les témoins après lecture faite.

அன்னையின் பெயர் இடம் பெறவேண்டுமன்றோ? அன்னையார் பெயர் யாது? மகாலட்சுமியா? இலட்சுமியா?' மிகச்சில இடங்களிலேயே குறிப்பிடப்பெறும் அன்னையார் பெயரிலும் இந்த வேறுபாடு."[1]

"தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட பாடநூல்களில் பாவேந்தரின் தந்தையின் பெயர் மட்டுமே குறிக்கப் பட்டுள்ளது.[2] தாயின் பெயர் யாண்டும் தெரிந்தோ தெரியாமலோ விடுபட்டுள்ளது. ஒருசில 'இதழ்களிலும்'[3] 'நூல்களிலும்'[4] 'மகாலட்சுமி' என்றும், வேறுசில இதழ்களில்,[5] நூல்களில்[6] 'இலட்சுமி' என்றும் இடம்பெற்று இருத்தலைக் காணலாம்.

பாவேந்தரின் அன்னையின் பெயர் இலட்சுமி அம்மாள் என்பதே சரியானது. இதற்குச் சான்ருகப் புதுவை நகர மன்றத்தில் (மேரி) பாவேந்தரின் தந்தையாகிய சு. கனகசபை அவர்கள், தம் மகனின் பிறந்த நாளினைப் பதிவு செய்துள்ளார். அப் பதிவேடு பிரஞ்சு மொழியில் உள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய செய்திகள் வருமாறு:

"சு. கனகசபை (தந்தை சுப்புராயன்)—புதுவை—செங்குந்தர் வீதி, வயது 41, செங்குந்தர் ஜாதி,—இலட்சுமி அம்மாள் (தந்தை பரதேசி முதலியார்)—சுப்புரத்தினம், பிறந்த நாள் 1891 ஏப்ரல் 29-ம் நாள் புதன்கிழமை, இரவு 10மணி 15நிமிடங்கள். ஆண்குழந்தை."

மேற்குறித்த செய்தி உண்மையானது என்று மு. பாவாடைப் பிள்ளை அவர்களும், அ. கந்தசாமி நாயக்கர் அவர்களும் சான்ருகக் கையொப்பம் இட்டுள்ளனர். பிரெஞ்சு அரசின் சட்டப்படி, பிரெஞ் சிந்தியப் பகுதியில் குழந்தை பிறந்தவுடன் சாட்சிகளுடன் மேரியில் (புதுவை நகர மன்றத்தில்) பதிவு செய்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டதுதான் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள ஆவணமாகும்.

இதன்மூலம் நாம் அறிவது யாதெனின், பாவேந்தரின் தாய்—தந்தையரின் உண்மைப் பெயர்கள் சு. கனகசபை—இலட்சுமி அம்மாள். பாவேந்தரின் பிறந்தநாள்: 29-4-1891.

குறிப்புகள்:

1. டாக்டர் இளவரசு—பாவேந்தரின் வரலாறுபற்றி...... ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் புதுச்சேரி, 1983.
2. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்—தமிழ்ப் பாடநூல் IX 1983 பக்கம் 70.
3. துரை-மாணிக்கம் (பெருஞ்சித்திரனர்)—புரட்சிப் பாவலர் பாரதிதாசன் குயில் 1967 குரல் 1, இசை 12 புதுவை. பக்கம் 10.
4. i. டாக்டர் பி. நசிம்தீன்—பாரதிதாசன் பாடல்களில் இயற்கை.
   ii. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்—பாடுங்குயில் ஏழாம் வகுப்புத் துணைப்பாடம் 1983.
5. சக்தி—சித்திரபானு மலர்7 கார்த்திகை இதழ் 3.
6. கவிஞர் மலர் (தொகுப்பு)—குயில் நிலையம், 1946.
7. புதுவை நகரமன்றத்தில் உள்ள பிறந்தநாள் பதிவேடு—நகல்.

•தமிழ் ஆராய்ச்சியும் தனிநாயக ஆய்வகமும்

[பேராசிரியர் டாக்டர் வே. அந்தனிஜான் அழகரசன் அடிகள்]

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தமிழ் ஆராய்ச்சியாள ராகத் திகழ்ந்த தனிநாயக அடிகளார் அமைத்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழுவும், ஐந்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளும் அவர்தம் புலமைக்குச் சான்று பகர்வன.

இத்தகைய ஆராய்ச்சிச் செல்வரின் பெயரால் மலேசியாவில் ஓர் ஆய்வகம் நிறுவப்படவேண்டும் எனக் கடந்த நான்கு ஆண்டு களாக நினைத்து வந்தேன். மலேசியத் தமிழ்ப் பேரவையின் துணைத் தலைவராகத் திகழும் ஜோசப் ராஜா அவர்களிடம் என் திட்டத்தை ஜனவரி 29இல் எடுத்துக்கூறினேன். அவர்களும் அப் பணிக்கு எல்லா ஒத்துழைப்புகளும் தந்தார்கள். அதன் விளைவாக ஈப்போவில் 19-2-84இல் 'தனிநாயக ஆய்வகம்' தொடங்கப்பெற்றது.

ஆய்வகத்தின் நோக்கங்கள்:

தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புகள் இக்காலத்துக்கு ஏற்றவையாகச் செய்தல், தமிழ் இலக்கியம், பண்பாடு, தமிழ் மக்க ளின் வரலாறு, வாழ்க்கைத் தத்துவம், மானிட இயல், சமயம், வழி பாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள், விழாக்கள், உணவு வகைகள், பொழுதுபோக்கு, விளையாட்டுகள், மற்றும் சிறப்பாக மலேசியத் தமிழர்களின் நிலை, அவர் தம் பிரச்சினைகள், தோட்டத்தொழிலாளர் நிலை, தமிழனின் பொருளாதார நிலை, மலாய் நாட்டின் வளர்ச்சியில் தமிழரின் பங்கு, தமிழிலக்கியங்களை மலாய் மொழியில் பெயர்த்தல், மலாய் இலக்கியங்களைத் தமிழில் பெயர்த்தல், மலேசியாவில் கிறித் தவர்கள் வளர்த்த தமிழ் இலக்கியம், முஸ்லீம்கள் வளர்த்த தமிழ் இலக் கியம், வெளிவந்துள்ள சிறுகதை, நாடகங்கள் பற்றிய ஆய்வுகள், வெளிவந்துள்ள தமிழ் நூல்களின் பட்டியல் தயாரித்தல், வானொலி தொலைக்காட்சிகள் மூலம் தமிழ் வளர்த்தல் ஆகியவையாகும்.

'தனிநாயக ஆய்வகம்' எந்த இயக்கத்தையும் சார்ந்திராமல் தன் இச்சையாக இயங்கும். தமிழ்மொழியிடத்தும் தமிழர் நலத்திலும் அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள அனைவரும் இந்த ஆய்வகத் தின் உறுப்பினர்களாகச் சேரலாம்.

ஆய்வகத்தின் சார்பில் 'தமிழ் மணம்' என்னும் முத்திங்கள் ஏடும் நடைபெறும். தொடர்பு கொள்ள விரும்புவோர்:

இயக்குநர், தனிநாயக ஆய்வகம்,
என் 2-சி மெடான் கிட், ஈப்போ, மலேசியா.
The director, Thaninayagam Research Academy,
2-C, Medan kidd, IPOH, MALASIA

என்ற முகவரிக்கு எழுதுக.

•"தமிழ்நேசன்" என்னும் மலேசிய இதழில் 2-3-84இல் வெளி வந்த செய்தியின் சுருக்கம்.

ஆசிரியருக்குக் கடிதம் :

வானொலி நிலையத்தாரின் வகைகெட்ட செயல்

அன்புடையீர்,

வணக்கம். சென்னை வானொலி நிலையத்தார், ஒவ்வொரு நாளும், காலை நேரத்தில் தமிழ் மணம் என்னும் பெயரில் நல்ல தமிழ்ப் பாடல்கள் சிலவற்றை ஒலி பரப்புகின்றனர். அது மிகப் போற்றத் தக்க செயலே. ஆனால், பல பாடல்கள் தவறாகப் பாடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"சொல்லாமலே பெரியர்,
சொல்லிச் செய்வார் சிறியர்,
சொல்லியும் செய்யார் கயவரே"

என்னும் வெண்பா வடிகளை,

"சொல்லாமலே பெரியர்
சொல்லிச் சிறுவர் செய்வர்
சொல்லியும் செய்யார் கயவரே"

என்று பிழையாகப் பாடுகின்றனர். அன்றியும், "ஈண்டு நீவரினும் எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்" என்று தொடங்கும் வில்லி பாரதப் பாடலை, "ஈண்டு நீ வரினும் எங்கள் எழிலுடை எழில் வண்ணன்" என்று ஓரசையைக் குறைத்துப் பாட்டைச் சிதைத்துப் பாடுகின்றனர். மேலும்,

"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு."

என்று தெய்வத் திருவள்ளுவர் குறட்பாவையே ஊனமாக்கி விட்டனர்.

சென்ற சில ஆண்டுகளாக இத்தகைய பிழைகளை நிலைய இயக்குநர்க்குச் சுட்டிக்காட்டி எழுதியும் மறுமொழி வந்ததில்லை. பிழைகளும் திருத்தப்பட்டதில்லை. சென்ற வாரம் இந்தக் குறளை மீண்டும் கேட்க நேர்ந்தபோது நான் மிகவும் வேதனையடைந்து பிழையைச் சுட்டிக்காட்டி மீண்டும் நிலைய இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதினேன். கடிதத்தின் இறுதியில்,

"தமிழகத் தலைநகர வானொலி நிலையத்தில் தமிழறியாதோர் பணியாற்றுவது தமிழ் மக்களுக்கு இழுக்கு" என்றும், "இந்தக் கடிதத்திற்கு மறுமொழி தரும் தைரியம் உங்களுக்குண்டா?" என்றும் எழுதியிருந்தேன். அப்போதும் அவர்கள் குருதி சூடேறவில்லை.

வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்போரையும், சிறப்பாகத் தமிழ் தெரிந்தோரையும் அவர்கள் துளியும் மதிப்பதில்லை என்னும் முடிவுக்குத் தான் நாம் வரமுடியும்.

சென்னை
4—4—84

அன்பன்
மு. ரா. பெருமான்

தமிழ்ப் பண்புகளைக் காக்கும் தனிப்பெரும் இதழ்!

அருமருந்தன்ன செந்தமிழ்ச் செல்வி இதழ்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அன்பளிப்பாக எம் தமிழ்ச் சங்கத்திற்கு அண்மையில் அனுப்பியது.

மிகப் பயனுள்ள சிறந்த கட்டுரைகளும், பாக்களும், செய்திகளும் இவ்விதழ்களில் உள்ளன. அழகிய வகையில் இவ்விதழ்கள் அச்சிடப்பெற்றுள்ளன.

தமிழ்ப் பண்புகளிலிருந்து விலகி இதழ்கள் வெளிவரும் இன்றைய நிலையில் தங்களின் இதழ் தமிழ்ப் பண்புகளொடு வெளிவருவது பேருவகை தருகிறது. செந்தமிழ்ச் செல்வியைப் பார்த்தால் தமிழ் மணக்கும். படித்தால் உள்ளம் பேரின்பத்தால் நிறையும். தங்கள் இதழ் என்றுமுள தமிழைக் காத்து வளர்த்து வழி காட்டுகிறது.

"தமிழுக்கு நேர்ந்துள்ள புதிய இடர்ப்பாடுகள்" (1983 மே இதழ்) "மக்கட் பெயர்" (1983 சூலை இதழ்) "அரக்கரில் அரக்கரில் அரக்கர்" (1983 ஆகஸ்டு இதழ்) ஆகிய ஆசிரியர் கட்டுரைகள் தமிழ் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் மிகப் பயன் தருவனவாய் உள்ளன.

பயன்தரு தமிழ்ப்பணிகள் செய்துவரும் இன்றைய தமிழ்நாடு அரசு இவ்வாண்டில் தங்கள் கழகம் வெளியிட்ட அரிய சிறந்த தமிழ் நூல்களை அன்பளிப்பாக எம் தமிழ்ச் சங்கத்திற்கு உதவியது. தங்கள் கழகம் சிறந்த பயன்தரு தமிழ் நூல்களை நன்முறையிற் பதிப்பித்துத் தமிழுக்கும் தமிழுலகிற்கும் பெரும் பணி செய்து வருகிறது. சிறந்த பரந்த பயனுள்ள நூற்பதிப்புப் பணியினால் வறண்ட பாலையைப் பைந்தமிழ்ச் சோலையாக ஆக்கியுள்ளது. தங்கள் கழகத்திற்குத் தமிழுலகு பெரிதும் கடமைப்பட்டுள்ளது. தங்கள் பேரொளி ஞாயிருகத் தமிழ் ஒளி பரப்பி இசை கொண்டு உலகு உள்ளளவும் வாழியவே.

கொழும்பு-6
4—8—1984

இ. க. கந்தசுவாமி
பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

———

செய்திகள்

முத்தமிழ்க் காவலர் முனைவர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் அறிக்கை

தமிழகத்தின் இழிநிலை குறித்து முத்தமிழ்க் காவலர் அவர்கள் நீண்டதோர் அறிக்கையினை வெளியிட்டுள்ளார்கள். அதில்: 14 மொழிகளைத் தேசிய மொழியென ஏற்றுக்கொண்ட மைய அரசினர் இந்தி மொழிக்கு மட்டும் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவிட்டு வருவதோடு, சுங்கத்துறை, தொடர் வண்டித்துறை, அஞ்சல்துறை, வருமானவரித்துறை ஆகியவற்றில் இந்தியைப் புகுத்தியவண்ண மிருக்கின்றனர் என்றும் வானொலி தொலைக்காட்சிகள் மூலம் இந்திப் பாடல்களைப் புகுத்திவருகின்றனர் என்றும், தமிழ்நாட்டு வங்கிகளில் தமிழ்மக்கள் பணம் கட்டுகிற தாள்களில்கூட கட்டாயமாக இந்தி புகுத்தப்பட்டுத் தமிழ் அழிக்கப்பட்டுவிட்டது என்றும், ஆயுர்வேத மருத்துவத்துக்கு 98 கல்லூரிகள் நடத்தும் இந்திய அரசு சித்த மருத்துவத்திற்கு மட்டும் ஒரே ஒரு கல்லூரி, தமிழகத்தில் மட்டும் நிறுவியுள்ளது என்றும், வடநாட்டுக் கலைகளை வளர்த்துத் தமிழ்நாட்டுக் கலைகளையும் கலைஞர்களையும் இழிவுபடுத்துகிறது எனவும், எடுத்ததற்கெல்லாம் வடவர் வாயிலில் கையேந்தி நிற்க வேண்டிய இழிநிலை இருந்துவருவது பற்றியும், படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கட்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பது பற்றியும், கர்நாடகமும் கேரளமும் தமிழகத்திற்கு வரும் நீரைத் தடைப்படுத்திவரும் கொடிய நிலையினைச் சுட்டிக்காட்டியதோடு தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றுபடவேண்டியதன் இன்றியமையாமையினைச் சுட்டிக்காட்டியும் இவைபற்றியெல்லாம் கூடிப் பேச விரைவில் திருச்சியில் ஒரு மாநாடு கூட்டவேண்டுமெனவும் கூறுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக அறிவியல் சொற்பொழிவு - 2

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் பண்ணை நடத்தும் அறிவியல் சொற்பொழிவு வரிசையில் 2-வது சொற்பொழிவு நிகழ்ச்சி 21—3—84 அன்று அய்யம்பேட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில், பேராசிரியர் சண்முகசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் இராம. சுந்தரம் (திட்டம், தமிழ் வளர்ச்சி இயக்குநர்) அனைவரையும் வரவேற்று, சொற்பொழிவு வரிசையின் நோக்கத்தை விளக்கினார். தஞ்சை மருத்துவக் கல்லூரி இணைப்பேராசிரியர் டாக்டர் எஸ். நரேந்திரன் 'குடல் புண்ணைக் குணப்படுத்தலாம்' என்ற தலைப்பில் விளக்கப் படங்களுடன் சிறந்ததொரு தமிழ்ச் சொற்பொழிவு நிகழ்த்தினார். சொற்பொழிவுக்குப்பின் வினா—விடை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி சிறப்புற நடத்த ஒத்துழைப்பு நல்கிய அய்யம்

பேட்டை டாக்டர் எஸ். சந்திரசேகரன், கண்ணன் ஆகியோருக்கும் பிறருக்கும் டாக்டர் இராம. சுந்தரம் நன்றி தெரிவித்தார்.

வாலாசாபாத் மாசிலாமணி முதலியார் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா

வாலாசாபாத் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் உயர்நிலைப் பள்ளி, மற்றும் மாணவர் இல்லங்களின் அறுபத்தெட்டாம் ஆண்டு நிறைவு விழா 18—3—84 அன்று மாலை நடைபெற்றது. தமிழகப் பள்ளிக் கல்வித்துறையின் துணை இயக்குநர் திரு. வி. ஏ. சிவ ஞானம், எம்.ஏ., பி.டி. அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்று மாணவர்களுக்கு நல்லறிவுரைகளையும் பாடசாலைக்குத் தம்முடைய பாராட்டுதல்களையும் வழங்கினர். பாடசாலை மேலாண்மைத் தலைவர் திரு. வா. து. நடராச முதலியார் அனைவரையும் வரவேற்றார். திரு. எம். எம். சரவணன், பி.ஏ.,எல்.டி. தலைமை ஆசிரியர் மு. சீனி வாசன், பி.ஏ.,பி.டி., டாக்டர் ஆர். என். வைத்தியநாதன், தி. கி. ஆதிமூலம், பி.ஏ.,பி.எல்., பி. எம். நாமதேவ் செட்டியார் ஆகியோர் வரவேற்புரை படித்தனர். திரு. எம். ஏ. அசீஸ் அலி, பி.ஏ.,பி.டி. அவர்கள் பாடசாலையின் பல்வேறு பணிகள்பற்றிய அறிக்கையினைப் படித்தார். செயலர் திரு நா. ப. தணிகை அரசு அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

இராமநாத அடிகளின் பன்னிரண்டாம் நினைவுநாள் விழா

சென்னை, சிவநேயர் பேரவையின் சார்பில் திருவூடல் விழாக் குழுவினர் சித்தாந்த பண்டிதர் சிவத்திரு. ப. இராமநாத அடி களாரின் பன்னிரண்டாம் நினைவுநாள் விழாவை 25—3—84 அன்று சென்னை தாடண்டர் நகர் சமூகக்கூடத்தில் மிகச் சிறப்பாகக் கொண் டாடினர். காலையில் சிவனடியார் திருக்கூட்ட ஊர்வலத்திற்குப் பின் மும்மொழிக் கொண்டல் திரு பெ. திருஞானசம்பந்தனர் தலைமையில் விழாத் தொடங்கிற்று. திரு. எம். ஜி. முத்துசாமிப் பிள்ளை. இ. ஆ. ப. (ஓய்வு) அவர்கள் சிவனர் கொடியை ஏற்றி வைத்தார்கள். சிவநேயப் பேரவைத் தலைவரும் பெரும்புலவருமான திரு. இர. திருஞானசம்பந்தன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினர். பெருமக்கள் நால்வர்க்குச் சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அறச்சுடர் முத்துலிங்கா ரெட்டியார், முதுபெரும் புலவர் சைவமணி சரவண தங்கவேலுப் பிள்ளை ஆகியோர் சிவநெறியின் மேன்மைகளை விளக்கிப் பேசினர். திரு. பாலசுப்பிரமணியனாரின் மகேசுவர வழி பாடு செய்தபின் விழா இனிது நிறைவுற்றது.

இராமசாமி தமிழ்க் கல்லூரி விழாக்கள்

காரைக்குடி இராமசாமி தமிழ் கல்லூரியின் 17ஆவது ஆண்டு விழாவும், நாவலர் ந. மு. வே. நாட்டார் நூற்றாண்டு விழாவும் முறையே பிப்ரவரி 21, 22ஆம் நாள்களில் நடைபெற்றன. நாட்டார் நூற்றாண்டு விழாவினையொட்டி, டாக்டர் வெ. சு. அழ கப்பன், டாக்டர் ச. சங்கர்லால் ஆகியோர்க்குப் பாராட்டு விழா நடைபெற்றது. இவ் விழாக்களுக்கு முறையே பேராசிரியர்கள் சு. ந. சொக்கலிங்கம், எம். ஏ., பி. ஓ. எல்., கா. முருகப்பன், எம். ஏ., எம். ஃபில் ஆகியோர் தலைமை ஏற்றனர். பேராசிரியர்

பலர் பாராட்டுரை வழங்கினர். மற்றும் அறிஞர் பலர் சிறப்புரை ஆற்றினர்.

சண்டமாருத பிரசங்க இரத்தினகரம் ஆ. தி. அ. ஈசுவரனுர் சொற்பொழிவுகள்

திரு. ஆ. தி. அ. ஈசுவரனுர் அவர்கள் சனிக்கிழமை தோறும் மாலை 6 மணி அளவில் சென்னை 66 அரண்மனைக்காரத் தெரு Y. M. I. A. மண்டபத்தில் கந்தபுராணத் தொடர் சொற்பொழிவும், ஞாயிறுதோறும், மாலை 4 மணியளவில் 34. சாவடித் தெரு, பல்லாவரத்தில் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவும் நிகழ்த்திவருகிருர். அன்பர்கள் கேட்டு இன்புறுவார்களாக. திரு. ஈசுவரன் அவர்கள் தமிழ்த் திருமணம், சன்மார்க்கத் திருமணம், 60 ஆண்டு நிறைவு விழா, 80 ஆண்டு நிறைவுவிழா, புதுமனை புகுவிழா மற்றும் இல்லங்களில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஆசானுகவிருந்து நடத்தி வைக்கிருர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேம்.

திருச்சி இந்து முன்னணித் தலைவர் திரு. விசுவநாத பிள்ளை மறைவு

திருச்சி இந்து முன்னணித் தலைவரும் புகழ்பெற்ற மருத்துவரும் பல குமுகாய நலக் கழகங்களின் தலைவரும் ஆகிய மருத்துவர் விசுவநாத பிள்ளை அவர்கள், ஸ்ரீ ரங்கத்திலுள்ள தமது இல்லத்தில் 4—4—84 காலையில் தமது 79ஆவது அகவையில் காலமானுர்கள் என்ற செய்தி அறிந்து வருந்துகிறேம். மறைந்த அப் பெருமகனுரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

செய்திகள் அனுப்புவோர் கவனிக்க

செந்தமிழ்ச் செல்வியில் அதிக பக்கங்கள் வெளியிட இயலாத நிலைமை இருப்பதால் செய்திகள் அனுப்பும் அன்பர்கள் மிகச் சுருங்கிய அளவில் எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நீண்ட செய்திகளை வெளியிட இயலாமைக்கு வருந்துகிறேம்.

ஆசிரியர்

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ருஅ, உகூ0ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
கல்லை. த. கண்ணன் (ஆசிரியர் 'வள்ளுவர் வழி')	5	00

மதிப்புரை

செந்நீரில் மலரும் செந்தமிழ் ஈழம்

[தொகுப்பு: இறையரசன், மணிமேகலை பதிப்பகம், சின்ன தாராபுரம்-639 202, கரூர் (வட்டம்), விலை: உரு. 5-00.]

இலங்கைத் தமிழரின் இன்னல்கள் தீரத் தமிழ் ஈழம் அமைவதைத் தவிர வேறு வழியில்லை என்னும் உண்மையைத் தம் உள்ளக் கிளர்ச்சியால் கவிதை வடிவில் வெளியிடுகின்றனர். பாவலர்கள் கன்னல், புகழேந்தி, முகில், விடியல் விரும்பி, இறையரசன் ஆகியோர். கவிதைகளுள் எது சிறந்தது என்று அறுதியிட இயலாவண்ணம் ஒன்றையொன்று விஞ்சுகின்றன, இவை, வெறும் எதுகை மோனைகளின் கூட்டுச் சரக்காக இல்லாமல் கவிதைகள் அனைத்தும் உள்ளக் குமுறல்களின் வெளிப்பாடுகளாக—உணர்ச்சிப் பிழம்புகளாக—உருப்படியான பலன் காணவேண்டும் என்னும் உணர்வோடு இயற்றப் பட்டனவாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டுகள் தரின் விரியும் என அஞ்சி விடுக்கின்றோம். கலைஞர், பேராசிரியர், தளபதி வீரமணி ஆகியோரின் கருத்துரைகளோடு வெளிவந்திருக்கும் இக் கவிதைத் தொகுப்புக்கு மேலும் மதிப்புரை தேவையில்லை எனக் கருதுகிறோம். படித்துப்பாருங்கள்.

எதிர் நீச்சல்

[ஆசிரியர்: கடலூர் மணிமாறன், மணிமேகலை பதிப்பகம், சின்ன தாராபுரம்-639 202. விலை: உரு. 5-00.]

முற்போக்குக் கருத்துடைய இந் நூலாசிரியர். தம் எண்ணங்களைக் கவிதை வடிவில் பல்வேறு சூழ்நிலைகளில் வெளியிட்டு, அவற்றை 'எதிர் நீச்சல்' என்னுந் தலைப்பில் தொகுத்துத் தந்துள்ளார். காதல்—தமிழ்—பகுத்தறிவு, அறம்—பொதுமை என்னும் வண்ணங்களால் படிப்போர் உள்ளங்களில் எழுச்சி தோன்றும் வண்ணம் தம்முடைய கருத்தோவியங்களைத் தீட்டியுள்ளார். கவிதைகளைப் படிக்கும்போது பாரதிதாசன் பரம்பரை வளர்கிறது என்ற மன நிறைவு தோன்றுகிறது. படித்துச் சுவைக்கவேண்டிய பயனுள்ள கவிதைத் தொகுப்பு.

பண்டித மணியின் நடை நயம்

[ஆசிரியர்: டாக்டர் இரா. மோகன், எம்.ஏ., பி.எச்.டி., பண்டித மணி நூற்றாண்டுவிழா வெளியீடு. சன்மார்க்க சபை. மேலைச் சிவபுரி, விலை: உரு. 12-00.]

பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மிக்கவர் பண்டிதமணி மு. கதிரேசன்

செட்டியாரவர்களாவார். அவரது எழுத்து நடையால் ஈர்க்கப்பெற்ற டாக்டர் இரா. மோகன் அவர்கள், பண்டித மணியின் நடை நயம் என்னும் இந் நூலில் செந்தமிழ் நடை ஆசிரியர், தமிழ் நயத் தந்தை, ஒப்பியல் நோக்கு என்னும் தலைப்புகளில் பண்டித மணியின் எழுத்தாற்றல்களை நன்கு விளக்குகிறார். எழுத்தாளர்கள் படித்துப் பயன் காண வேண்டிய நூல்.

அருள்மிகு காமாட்சி அந்தாதி (மூலமும் குறிப்புரையும்)

[ஆசிரியர்: அ. முத்தையன், செயலர், சற்சங்கம், கண்டாச்சிபுரம். குறிப்புரை: டாக்டர் க. ஆறுமுகனார், எம்.ஏ., பிஎச்.டி., தமிழ்ப் பேராசிரியர், தில்லிப் பல்கலைக் கழகம், சற்சங்கம், கண்டாச்சிபுரம்-605 701, விலை: உரு. 4-00.]

கவிஞர் முத்தையன் அவர்கள் அருள்மிகு அன்னை காமாட்சியைத் தமக்கு அன்னையாக்கித் தம்மை அவர்தம் அருமை மகவாகக் கற்பனை செய்து 102 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் சொன்னயம் பொருள் நயம் கற்பனை வளம் நிரம்பப் பாடியிருக்கும் பாடல் தொகுதியே காமாட்சி அந்தாதி. பக்திக்காகவும், பாநயத்துக்காகவும் பலமுறை படித்தின்புறத் தக்க அரிய அந்தாதி நூல்.

பாரதி நோக்கில் இன்றைய சமுதாயம் குற்றமுடையதா? (கவிதை வழக்குரை)

[ஆசிரியர்கள்: கவிஞர் மணிமாறன், பேராசிரியர் சக்திப்புயல். கவிஞர் பாலா கந்தசாமி, கவிஞர் கல்லாடன், பி.ஏ., கவிஞர் இலக்கியன் ஆகியோர். தென்றல் பதிப்பகம்; 95, ரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி-605 001.]

பெருங்கவிஞர் பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழா வெளியீடாக வெளியிடப்பட்டிருக்கும் இந்நூல் கவிஞர் நால்வர், ''பாரதி நோக்கில் இன்றைய சமுதாயம் குற்றமுடையதா'' என்பது பற்றிக் கவிதையில் வழக்காடிய கவிதைத் தொகுப்பேயாகும். வழக்குத் தொடுப்பு—வழக்கு மறுப்பு. வழக்குத் தொகுப்பு—நடுவர் தீர்ப்பு ஆகிய அனைத்தும் சுவையுடனும் விறுவிறுப்பாகவும் பல பொருள்களைத் தொட்டுச் செல்கின்றன.

தடாதகைப் பிராட்டி

[ஆசிரியர்: குலசேகரன், அமிழ்தம் பதிப்பகம், நார்த்தாம்பூண்டி, திருவண்ணாமலை வட்டம், (வ. ஆ.)-606809, விலை: உரு. 7-00.]

திருவிளையாடற் புராணத்தில் தடாதகைப் பிராட்டியின் குழந்தைப் பருவப் பாடல்களில் வரும் கவிதை நயம், வரலாற்றுண்மை, கற்பனை, செய்யுள் திறம் இவற்றால் கவரப்பெற்ற இந் நூலாசிரியரின் அரிய முயற்சியால் உருவானதே இந்நூல். மலையத்துவசனின் பண்பினில் துவங்கி, 'இறைவனின் அருட்கொடை' ஈருகப் பதினாறு தலைப்புகளில் தடாதகைப் பிராட்டியின் வரலாற்றினைச் சுவைபட எழுதியுள்ளார்.

குறிக்கோள் (தனித்தமிழ்க் கொள்கை இதழ்)

[சிறப்பாசிரியர் : குடந்தை கதிர் தமிழ்வாணன். உ. த. கழகத் துணைப் பொதுச் செயலாளர், தனி இதழ் 60 காசு. ஆண்டு நன்கொடை உரு. 7-00].

குமுகியல், அரசியல், இலக்கியம், மதவியல், பண்பியல் இவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு நடைபெறும் தூய தனித் தமிழ் இதழ்.

ஆழ்வார் அழுகிருர் !

[இயற்றியவர் : வடலூர் அடிப்பொடி பி, லிட்., புலவர் தி. பத்ம லோசனி எம். ஏ., பி. இயட். வள்ளலார் பொதுநெறி இல்லம். 6. அஞ்சலகத் தெரு. திருவைகுந்தம்-628601. விலை: 60 காசுகள்].

ஆழ்வார் தோன்றிப் பரப்பிய பக்தி இயக்கத்தின் இன்றை நிலையினை மனக் கண்முன் கொண்டுவந்து நெஞ்சம் உருகப் பாடியிருக்கும் பாடல்களின் தொகுப்பே 'ஆழ்வார் அழுகிருர்' என்னும் சிறு வெளியீடாக வெளிவந்துள்ளது. பாடல்கள் சுவையும் பயனும் உடையவை.

ஸ்ரீ ரமண வழி (மூன்ரும் பாகம்)

சாதனை சாரம்

[இயற்றியவர் : ஸ்ரீ சாது ஓம், ஸ்ரீ அருணசல ரமண நிலையம் 11B மணக்குள விநாயகர் தெரு, ஸ்ரீ ரமண நகர், திருவண்ணமலை-3 விலை : உரு. 15-00].

ரமண முனிவரின் பக்தி அறிவுரைகள் இந் நூலின்கண் 86 தலைப்புகளில் கூறப்பட்டுள்ளன. இம் முனிவரின் அறிவுரைகளின் படி சாதனை செய்வோர்க்குப் பயன்படும் நூலாகையால் இது சாதனை சாரம் எனப்பட்டது. அழகிய பதிப்பு.

கட்டுரையாளர்கள் கவனிக்க

பலமுறை கூறியும் கட்டுரை எழுதும் அன்பர்கள் மிக நீண்ட தொடர் கட்டுரைகளை எழுதியனுப்புவதோடு அதனை வெளியிடுமாறும் அன்புத் தொல்லை தருகின்றனர். தாள் விலை ஏற்றத்தால் இடர்ப்படும் 'செல்வி'யில் அதிக பக்கங்கள் வெளியிட இயலாத நிலையில், இத்தகைய கட்டுரைகளை வெளியிட இயலாமைக்கு வருந்துகிருேம். எனவே, சுருக்கமும் விளக்கமும் கூடிய 4 பக்கங்கட்கு மேற்படாத கட்டுரைகட்கே முதலிடம் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு அந்தந்த ஆங்கில மாத இறுதிக்குள் கிடைக்குமாறும் அனுப்பிவைத்தல் நலம்.

—ஆசிரியர்

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட்.

கழகப் புதிய வெளியீடுகள்

புரட்சிக் கவிஞர்

தொகுப்பாளர் : முல்லை முத்தையா.

(பாவேந்தரைப்பற்றி அறிஞர் பலர் வழங்கிய கருத்துரைகளின் தொகுப்பு.) ரூ. 8 00

மன இயலும் குழந்தைவளர்ப்பும்

—ரெவரெண்ட் சத்திய சாமுவேல், பி.ஏ., எஸ்.டி ரூ. 7 50

மன இயலும் மண வாழ்க்கையும்

—ரெவரெண்ட் சத்திய சாமுவேல், பி.ஏ., எல்.டி. ரூ. 12 00

(இரண்டு நூல்களும் திருமணப் பரிசுக் குரியவை.)

தமிழ்த்தாய் பிள்ளைத்தமிழ்—கவிஞர் பேகன்

தமிழ்த்தாய்க்கு இப்படியொரு பிள்ளைத்தமிழ் பாடியிருப்பது இதுவே முதன்மையும் புதுமையுமாகும். ரூ. 5 00

தமிழகக் குடைவரைக் கோயில்கள்

—தி. இராசமாணிக்கம். பி. ஏ., பி. காம். ரூ. 11 00

தமிழகச் சிற்ப, ஓவியக் கலைகள்

—டாக்டர். ஏ. ஏகாம்பரநாதன் ரூ. 12 00

கழக நிலையங்களில் கிடைக்கும் பிற பதிப்பாளர்களின் புதிய வெளியீடுகள்

ஆபிரகாம் லிங்கன்—அ. லெ. நடராசன்	20	00
கிறித்தவ அருட்கவிகள்—தி. தயானந்தன் பிரான்சிஸ்	16	00
கந்தர் அலங்காரம் கந்தர் அந்தாதி—கார்த்திகேயன்	6	50
சைவசித்தாந்தம்—ந. ரா. முருகவேள்	30	00
நபிகள் நாயகம் அவர்களின் சரித்திர நிகழ்ச்சிகள் —எம். கே. ஈ. மௌலானா	20	00
மோட்டார் மெக்கானிசம்—இரா. நடராசன்	13	50
வாலம் ஆயிரம்—மது. ச. விமலானந்தம்	33	00
திருச்செந்தூர் முருகன்—புலவர். செந்துறைமுத்து	6	00
சங்ககால மகளிர்—சி. பாலசுப்பிரமணியன்	7	00
திரு. வி. க. ஒரு பல்கலைக் கழகம் —மணிவாசகர் நூலகம்	37	50

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 16/-	உள்நாடு	ரூ. 150/-
வெளிநாடு	ரூ. 30/-	வெளிநாடு	ரூ. 300/-

Three Rare Books on Saiva Siddhanta Philosophy

All by

J. M. Nallaswamy Pillai, B.A., B.L.

1. **SIVAGNANA BOTHAM**
   of MEIKANDA DEVA
   Translated with Notes and Introduction.
   Double Demy Size 158 Pages. ... Rs. 40/-

2. **SIVAGNANA SIDDHIYAR**
   of ARUNANDI SIVACHARYA
   Translated with Introduction, Notes etc,
   Double Demy Size 338 Pages. ... Rs 65/-

3. **STUDIES IN SAIVA SIDDHANTHA**
   A Collection of Twenty Four Essays
   on Religion and Philosophy.
   Double Demy Size 376 Pages. – Rs. 65/-

Publishers:

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
79, Prakasam Saalai (Broadway),
Madras-108.

Branches:

Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam-1 Tiruchirappalli-2

அப்பர் அச்சகம் சென்னை-108.